கோகுலம்


குழந்தைகள் பத்திரிகை

13-10-1974

50 காசு




மணங்கவரும் யாவற்றையும் என்றும் மன மகிழ படம் பிடித்து வைப்பீர்!



ஆக்:பா ஐஸோலி குறைவான ஒளியிலும் நிறைவான போட்டோக்களுக்கு.

விலை
Rs.182/50
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



ஆக்:பா ஐஸோலி I அமெச்சூர் புகைப்பட கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை அளித்திடும் காமெராவாக இது விளங்க 6 காரணங்களாவன:

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் லீவரை இயக்குவது இலகு.
2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் F8 லென்ஸ்.
3. பாதகமான சூழ்நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதி தரும் 2 லென்ஸ் அடைப்புகள்.
4. விசேஷ லாக்கிங் பொறியமைப்பை உடைய பிலிம் சுருட்டுக் குமிழ் இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது.
5. 120 சைஸ் ரோல்பிலிமிலே 16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடையதைவிட 4 அதிகம்).

திரையிடுவதற்கெனப் பளிச்சென்ற ஆக்:பா கலர் டிரான்ஸ்பேரென்ஸிகளையும் எடுக்கிறது ஆக்:பா ஐஸோலி I. தெள்ளத் தெளிவுள்ள பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மென்டுகளுக்கும் எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர் ஆக்:பா-கெவார்ட் போட்டோத் தாள்களை.

தயாரிப்பாளர்கள்:
நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

ISOLY-I

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்:பா-கெவார்ட் இந்தியா லிமிடெட்.,
மர்ச்சன்ட் சேம்பர்ஸ், 41, நியூ மெரின்லைன்ஸ், பம்பாய்-400 020.
கிளை அலுவலகம்: பம்பாய் - புது டெல்லி - கல்கத்தா - சென்னை
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்:பா-கெவார்ட் ஆண்ட்வெர்ப்/லீவர்குசன் அவர்களின் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்.

SIMOES/AG/33 TAM



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 14
அக்டோபர் 13, 1974
ஆனந்த, புரட்டாசி, 27

■

சந்தா விவரம் :
உள்நாடு:
ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளிநாடுகள் :
ஆண்டுச் சந்தா ரூ. 25-00

மானேஜர் :
கோகுலம்
கல்கிப் பூங்கா,
சென்னை - 600031



அட்டையில் :
பாம்பு என்று கேட்டபோது
படையும் நடுங்குதாம்
பாம்பாட்டி மகுடியிலோ
பாம்பும் அடங்குதாம்.

வண்ணப் படம் :
கே. எஸ். ராமானுஜம்



நவராத்திரி நாயகி

-ரமா-

முன்பு ஒரு காலத்தில் ஹிரண்யாக்ஷனுடைய வம்சத்தில் ஒரு ராஜா இருந்தான். அவன் பெயர் ருரு. அவனுக்குத் துர்கமன் என்று ஒரு மகன் பிறந்தான். அவன் மகா நீசனாக, ராக்ஷஸ குணம் மிகுந்தவனாக இருந்தான். அவன் பார்ப்பதற்கு மிகவும் பயங்கர ரூபமுடையவனாக இருந்தான். அவன் மனத்தில் ''தேவர்களுக்கெல்லாம் வேதத்தினால் தான் பலம் இருக்கிறது. வேதங்களை நான் என் வசம் வைத்துக் கொண்டால் தேவர்களின் பலம் போய்விடும். நாமே எல்லா உலகையும் ஆளலாம்'' என எண்ணினான். ஆகையால் அந்த ராக்ஷஸன் இமய மலைக்குச் சென்று ''பிரம்மாவை மனத்தில் தியானம் செய்து கொண்டு கடும் தவம் செய்ய ஆரம்பித்தான். ஓராயிரம் ஆண்டுகள் காற்றை மட்டும் குடித்துக் கொண்டு, அவன் தவம்செய்தான். அவனுடைய தவத்தின் சக்தியால் தேவர்களும் மானிடர்களும் வேதனைப்பட்டார்கள்.

அப்பொழுது ஹம்சத்தின் மீதமர்ந்து அன்றலர்ந்த தாமரைப் புஷ்பம் போல் அழகான முகத்துடன் பிரம்மா துர்க்கமாசுரனிடம் வந்தார். துர்கமன் கண்களை மூடியபடி சமாதி நிலையில் இருந்தான்.

அவனிடம் பிரம்மா, ''துர்கமா, உனக்கு நல்லது உண்டாகட்டும். உனது கடுந் தவத்தினால் நான் மிகவும் சந்தோஷம் அடைந்தேன். உனக்கு என்னவரம் வேண்டுமோ கேள்'' என்று சொன்னார்.

துர்கமன் எழுந்து நின்றான். பிரம்மா வுக்கு பூஜை செய்த பிறகு அவரிடம் ''என்னிடம் வேதங்களை எல்லாம் கொடுத்து விடுங்கள். தேவர்களையெல்லாம் நான் வெற்றி கொள்ள எனக்குப் பலமும் கொடுக்க வேண்டுகிறேன்'' என்று வரம் கேட்டான்.

துர்கமனின் பேச்சைக் கேட்ட நான்கு வேதங்களுக்கும் கடவுளான பிரம்மா, ''அப்படியே ஆகட்டும்'' என்று வரம் கொடுத்து விட்டார்.

பிரம்மாவின் வரத்தினால் நான்கு வேதங்களும் துர்கமனிடம் வந்துவிட்டன. அதனால் யாவருக்கும் வேதங்கள் மறந்து போய்விட்டன. வேத மந்திரங்கள் மறந்து போனதால் ஸந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், யாகம், முதலியவைகளைச் செய்ய முடியவில்லை. யாகம் செய்யாததால் தேவர்களுக்கு அதில் ஹவிர்பாகமும் கிடைக்கவில்லை. தேவர்கள் அமரர்களாக இருந்தும், ஹவிர்ப்பாகம் கிடைக்காமையால் பலமிழந்து போனார்கள். அந்தணர்கள் 'இது என்ன விபரீதம்! வேதங்கள் எங்கு போயின? அவை இல்லாமல் நாம் என்ன செய்வது?' என்று கதற ஆரம்பித்தார்கள்.

துர்கமன் தன் அசுர பலத்தால் எல்லா இடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டான். தேவர்களும் ராக்ஷஸனிடம் சண்டைபோட முடியாமல் ஓடி ஒளிந்து கொண்டார்கள். மானிடர்களும் அந்த அசுரனின் கொடுமைக்குப் பயந்து, மலையின் குகைகளிலும், காட்டிலும் எங்கெங்கு இடம் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.





யாகம் எதுவும் செய்யாமையால் மழை பெய்வதும் நின்று விட்டது. மழை பெய்யாமையால் எங்கும் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. பூமியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் நதி, கிணறு, ஆறு எல்லாம் காய்ந்து விட்டன. இம்மாதிரி வறட்சி நூறு வருடங்கள் இருந்தது. ஆடு, மாடு, பசுக்களும், ஜீவராசிகளும் இறந்து விட்டன.

இப்படிப் பயங்கரமான நிலை ஏற்பட்டவுடன், தேவர்களும் அந்தணர்களும் ''நம் யாவருக்கும் அன்னையான, அம்பிகையை நினைத்துத் தியானம் செய்வோம். அவள் நம்மை யெல்லாம் காப்பாற்றுவாள்'' என்று அன்ன ஆகாரமில்லாமல் தவம் இருந்தார்கள்.

இம்மாதிரி பிராம்மணர்களும் தேவர்களும் தவம் செய்தவுடன், தேவி பராசக்தி நூறு கண்கள் உள்ள தனது திவ்ய ரூபத்துடன் காட்சி தந்தாள். அம்பாளுடைய இந்த ரூபம் கறுப்பு மலை போல் இருந்தது. கைகளில் பசி, தாகத்தைப் போக்கக் கூடிய அநேக விதமான பழங்களும், காய் கனிகளும் இருந்தன. கண்கள் நீலத்தாமரை புஷ்பம் போல் இருந்தது. இப்படிப்பட்ட திவ்ய ரூபத்துடன் உள்ள தேவி தன் கண்களில் இருந்து நீரை வர்ஷிக்க ஆரம்பித்தாள். தேவியின் கண்களிலிருந்து வர்ஷித்த ஜலத்தால், ஒன்பது தினங்கள் மூன்று லோகங்களிலும் கடுமையான மழை பெய்தது. மழை பெய்ததால் மூன்று லோகத்திலும் வறட்சி போய்விட்டது. நதிகளிலெல்லாம் நீர் பெருகி ஓடியது. தேவி நூறு கண்களுடன் காட்சி அளித்ததால் ''சதாட்சி'' என்ற பெயர் ஏற்பட்டது.

துர்கமாசுரனின் அட்டகாசத்தினால் பயந்து மறைந்திருந்த தேவர்கள் யாவரும் வெளியே வந்தார்கள். எல்லோருமாகத் தேவியை துதித்தார்கள். ''துர்கமாசுரனை வதம்' செய்து வேதங்களை மறுபடியும் எங்களுக்குக் கொடுத்து அருள் செய்'' என்று வேண்டிக்கொண்டார்கள். ''நாங்கள் மிகவும் பசியுடன் இருப்பதால், உன்னை மேலும் ஸ்தோத்திரம் செய்யவும் சக்தி இல்லாதவர்களாக இருக்கிறோம்'' என்றும் சொன்னார்கள். அவர்களுடைய வேண்டுதலைக் கேட்டவுடன் தேவி தன் கையில் இருந்து காய்கனிகளையும் வித விதமான அன்னங்

களையும் கொடுத்து அவர்கள் பசியைப் போக்கினாள். ஆகவே தேவிக்குச் ''சாகம் பரி'' என்ற பெயரும் ஏற்பட்டது.

பராசக்தி, உலகின் வறட்சியைப் போக்கி எல்லோருடைய பசியையும் போக்கி, அருள் புரிந்த விவரத்தைத் துர்கமாசுரன் ஒரு தூதன்மூலம் அறிந்து கொண்டான். உடனே அவன் மகா கோபத்துடன் தேவியுடன் யுத்தம் செய்வதற்காகத் தனது பெரும்படை யுடன், பலவிதமான ஆயுதங்களை யும் எடுத்துக் கொண்டு வந்தான். தேவி யின் எதிரில் வந்து, தேவர்களையும் மனி தர்களையும் வளைத்துக் கொண்டு நின் றான். தேவர்களும் மனிதர்களும் தேவியை நோக்கி, 'அம்மா! காப் பாற்று, காப்பாற்று' என்று கதறி னார்கள். உடனே அம்பிகை தேஜோ மயமான சக்கரத்தை உற்பத்தி செய்து, அதில் தேவர்களையும் சகல ஜீவன்களை யும் வைத்துவிட்டுத் தான் மட்டும் வெளியே வந்தாள்.

அதன் பிறகு தேவியும், துர்கமாசுர னும் கடும் போர் புரிந்தார்கள். தேவி யின் திவ்ய ரூபத்திலிருந்து அநேக சக்திகள் காளிகா, தாரிணி, ரமா, பகலா என்று உதித்தனர். எல்லா சக்தி களுமாகச் சேர்ந்து, துர்கமா சுரனின் படையை நாசப்படுத்தி விட்டார்கள். பத்து நாட்கள் இந்தப் போர் தொடர்ந் தது. பதினோராவது நாள் துர்கமன் நேரடியாகத் தேவியுடன் போரிட்டான். தேவி அவன் மீது அம்புகளை எய்து அவனை வதம் செய்தாள்.

துர்கமாசுரன் மடிந்ததும் பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான எல்லா தேவர்களும் தேவியைத் துதித்தார்கள். தேவியும் சந்தோஷமடைந்து, நான்கு வேதங்களையும் மறுபடியும் அவர்களுக்கு அளித்தாள். மேலும் ''இந்த நான்கு வேதங்களும் என்னிடமிருந்துதான் வெளி வந்திருக்கின்றன. ஆகையால் இதை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்'' என்று சொன்னாள்.

துர்கமன் என்னும் அசுரனை வதம் செய்ததால் தேவிக்கு துர்க்கா என்று பெயரும் ஏற்பட்டது.

□ □ □ □ ஓ, அப்படியா? □ □ □ □

பிட்டு: *அப்பப்பா என்ன புழுக்கம்! என்ன புழுக்கம்? இன்னிக்கு வெயில் நூத்தி நாலு டிகிரி இருக்கும் போலிருக்கே!*

சிள்: *சிர்...சிர்...சிர்...! வெப்ப நிலையை அத்தனை கணக்காகச் சொல்றியே? அது எங்களாலேதான் முடியும். நீங்க வெப்ப மானியைப் பார்த்துத்தானே வெப்ப நிலை யைத் தெரிஞ்சுப்பீங்க?*


பிட்டு: *குரல் கேக்குது ஆனா உருவம் தெரி யலையே. நீ யார், எங்கிருந்து பேசறே?*

சிள்: *இதோ இந்தச் சுவரிலே பாரு. நான்தான் சிள்வண்டு. என்னைச் சுவர்க் கோழி என்றும், பாச்சை என்றும்கூட நீங்கள் சொல்வீர்கள். எங்களில் ஓர் இனம் 'வெப்ப நிலை கூறும் சிள்' (Temparature Criket) என்று பெயர். எங்களுடைய விஞ்ஞானப் பெயர் எகாந்தஸ் (Ecanthus) என்பது. நாளின் வெப்ப நிலையை எங்கள் சத்தத்திலிருந்து சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். பாதரஸ வெப்ப மானியைத் தேடி ஓட வேண்டாம்.*

பிட்டு: *அப்படியா? அதிசயமான விஷய மாக இருக்கிறதே?*

சிள்: *வெப்ப நிலைக்கு ஏற்றவாறு எங்க ளுடைய 'சிர்சிர்' என்ற சிள் சத்தமும் மாறு படும். ஒரு நிமிஷத்தில் நாங்கள் எத்தனை முறை சிள் சத்தம் எழுப்புகிறோமோ அதைக் கணக்கிட்டு, வருவதை நாலால் வகுத்துக் கொள். அத்துடன் நாற்பதைக் கூட்டிக் கொள். வரும் விடைதான் அன்றைய வெப்ப நிலை - ஃபாரன்ஹீட் கணக்குப்படி. இதைப் பல தடவைகளில் சோதனைகள் நடத்திச் சரிபார்த்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். ஒவ் வொரு முறையும் மிகத் துல்லியமாக அன் றைய வெப்ப நிலையை நாங்கள் எங்கள் ஒலி மூலம் அறிவிக்கிறோம். நாங்கள் மரங்களில் தான் வசிப்போம். சிலவேளைகளில் எங்களை Snowy Tree Criket என்றும் அழைப்பார்கள்.*

பிட்டு: *ஓ! அப்படியா? நீங்கள் அதிசய மான பிறவிகள்தான்.*



பெரிய முறுக்கு!

பெரிய பெரிய முறுக்கு
பெட்டி நிறைய இருக்கு
உரியில் பெட்டி இருக்கு
உற்சா கமாய் இறக்கு

வெள்ளை சிவப்பு முறுக்கு
விதவித மாய் இருக்கு
துள்ளி எடுத்து ஒடித்து
சுக்கு நூறாய் நொறுக்கு



அம்மா சுடும் தோசை!

அம்மா சுடும் தோசை
அழகு அழகுத் தோசை
கும்மா ளமாய் எல்லாம்
குதித்துத் தின்போம் தோசை.

இன்னும் கேட்க ஆசை
எடுத்துத் தின்னச் சென்றால்
மென்மை அம்மா கையால்
மேலே விழும் பூசை.

— வேட்டைநல்லூர் தமிழன்பன்

எருமை அண்ணா!

எருமை அண்ணா எருமை அண்ணா
எங்கே போகிறாய் ?
அருமை யான குளத்தி னிலே
அமுங்கப் போறியா ?

புதிய குளச் சேற்றி னிலே
புரளப் போறியா ?
கதிர் அறுத்த வயலினையே
கலக்கப் போறியா ?

எமன் உன்னைக் கூப்பி டுறான்
இப்பப் போறியா ?
உமது குணம் பொறுமை தனை
உணர்த்தப் போறியா ?



பொம்மை

சின்னச் சின்ன பாப்பா
சிரித்து விழிக்கும் பாப்பா
முன்னே பின்னே போகும்
முழுக்கக் களித்து ஆடும்.

சின்ன முகம் திட்டம்
சிரித்த கண்கள் வட்டம்
பின்னந்தலை மட்டம்
பின்னல் மட்டும் குட்டை.


ஆடும் போது அழகை
அமரும்போது சிரிப்பு
அருமையான பொம்மை
அயல்நாட்டுப் பொம்மை.

— கோமகள்



கோலப் போட்டி

'உமா'



சரஸ்வதி பாடசாலை மாணவிகளுக்காக அப்பாடசாலைத் தலைமை ஆசிரியை கோடை விடுமுறையைப் பயனுறக் கழிப்பதற்காகத் திட்டமொன்றை வகுத்தார். அதன்படி மாணவிகள் விடுமுறையில் நன்றாகக் கோலம் வரையப் பழகிக் கொண்டு, பள்ளிக்கூடம் திறந்த அன்று அவர்கள் தாங்களே வரைந்த ஒரு சிறந்த கோலத்தைக் கொண்டு வந்து அவற்றைப் பள்ளிக்கூடக் காட்சியில் வைக்க வேண்டும். அவையெல்லாவற்றிலும் சிறந்ததற்குப் பத்து ரூபாய்ப் பரிசு கொடுக்கப்படும்.

இதற்காகக் கோலத்தில் நாட்டம் கொண்ட எல்லா மாணவிகளும் மும்முரமாகக் கோலம் வரைந்து பழகிக் கொண்டார்கள். ஆனால் ஒரே ஒரு மாணவி மட்டும் வாளாவிருந்தாள். அவள்தான் வசந்தி. வசந்தி ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தந்தையற்ற அவளுடைய தாயார் நோய் வாய்ப்பட்டவள். இதனால் வசந்தி தன் தாயாருக்குப் பதிலாகத் தானே பலகாரங்கள் செய்து அவற்றை விற்றாள். மேலும் தன் தம்பி · தங்கையரையும் அவளே கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதனால் வசந்திக்குக் கோலம் வரைந்து பழகிக்கொள்ள நேரமே கிடைக்கவில்லை. இருப்பினும் எல்லா மாணவிகளும் வசந்திக்கே பரிசு கிடைக்கும் என்று நம்பினர். ஏனெனில் வசந்தி சாதாரணமாகவே தன் மனத்தில் நினைத்த உருவத்தை வெகு அழகாகப் புள்ளிகள் அமைத்து அதைக் கோலமாக்கி விடுவாள். வசந்தி பள்ளிக்கூடம் திறப்பதற்கு முன்தினம் ஏதாவது ஒரு கோலத்தைத் தன் நோட்டுப் புத்தகத்தில் வரைந்து கொள்ளலாம் என்றிருந்தாள். இச்செய்தியை வசந்தியின் வாய்மூலமே அறிந்து கொண்டாள், அவள் வகுப்புத் தோழியான சித்ரா. சித்ரா சுமாராகத்தான் கோலமிடுவாள். ஆனால் இம்முறை எப்படியாவது தானே பரிசைத் தட்டிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். எனவே பள்ளிக்கூடம் திறப்பதற்கு முதல் நாள் மாலை, வசந்தி வீட்டில் இல்லாதபோது, அவள் வீட்டுக்குச் சித்ரா சென்றாள். அப்போது அவளுடைய தாயார் மட்டுமே வீட்டில் இருந்தாள். வசந்தியிடமிருந்து ஒரு புத்தகத்தைப் பெற வந்துள்ளதாகக் கூறினாள் சித்ரா. அதற்கு வசந்தியின் தாயார், ''வசந்தி பலகாரம் விற்கப் போயிருக்காம்மா. திரும்பி வர்றதுக்கு நேரமாகும். அதோ அந்தப் பெட்டி மேலேதான் அவளுடைய புத்தகங்கள் எல்லாம் இருக்குது. நீயே தேடிப் பார்த்து எடுத்துக்கோயேன்'' என்று கூறினாள். சித்ராவும் அந்தப் புத்தகத்தைத் தேடுவதுபோல் தேடினாள். கடைசியில் அவளுடைய கைகளில், வசந்தி போட்டிக்காக வரைந்திருந்த ஒரு கோலம் புத்தகத்தில் அகப்பட்டது. கோலம் வரையப்பட்டிருந்த தாளைக் கிழித்தெடுத்து அதை மறைத்துக்கொண்டு தேடிவந்த புத்தகம் தனக்குக் கிடைக்கவில்லை என்றும், பிறகு

வந்து அதை வசந்தியிடமே வாங்கிக் கொள்வதகாவும் வசந்தியின் தாயாரிடம் கூறி விடைபெற்றாள் சித்ரா.

அன்று கோடை விடுமுறை முடிந்து பள்ளி தொடங்கியிருந்தது. எல்லா மாணவிகளும் கண்காட்சியில் தங்கள் தங்கள் கோலத்தை வைத்தார்கள். சித்ராவும் வந்து வசந்தியின் கோலத்தின் கீழ் தன்னுடைய பெயரை எழுதி வைத்தாள். ஆனால் வசந்திதான் ஒரு கோலத்தையும் போட்டிக்காகக் கொண்டு வரவில்லை. ஏனெனில் காலையில் பள்ளிக்குக் கிளம்பும் நேரத்தில் புத்தகத்தில் தான் போட்டிக்காக முதல் நாள் வரைந்து வைத்திருந்த கோலத்தைக் காணாது திடுக்கிட்டாள். அவள் எல்லாப் புத்தகங்களிலும் தேடிப் பார்த்தாள். இருந்தும் என்ன பயன்? பள்ளிக்கூடத்துக்கு நேரமாகி விட்டதால் வேறு கோலமும் வரைய முடியவில்லை. எனவே மனச் சோர்வுடன் பள்ளிக்கு வந்தாள். அங்கு கோலக் கண்காட்சியில் தான் வரைந்த கோலத்தின் கீழ் சித்ராவின் பெயர் இருப்பதைக் கண்டு அதிர்ந்தாள். அப்போதுதான், சித்ரா தன் வீட்டுக்கு வந்ததைப் பற்றி அவள் தாயார் கூறியது அவள் ஞாபகத்துக்கு வந்தது. அப்படியானால் சித்ராதான் தன்னுடைய நோட்டுப் புத்தகத்திலிருந்து போட்டிக்கான கோலத்தைக் கிழித்தெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

எல்லா மாணவிகளும் கோலக் கண்காட்சியில் வசந்தியின் கோலத்தைக் காணாது வியந்தார்கள். சித்ராவின் கோலம் சிறப்பாக அமைந்திருப்பதைக் கண்டு எல்லோரும் சித்ராவுக்கே பரிசு கிட்டும் என்று நினைத்தனர். சித்ராவும் தனக்கே பரிசு கிடைக்கும் என்று நினைத்துப் பூரித்துப் போனாள்.

மாலையில் பள்ளியில் கூட்டம் கூடியது. தலைவர் கண்காட்சியில் கோலங்களைப் பார்வையிட்ட பின்னர் முடிவைக் கூற ஆயத்தமானார். எல்லா மாணவிகளும் முடிவை அறிந்து கொள்ள ஆவலுடன் இருந்தனர். தலைவர் எழுந்து நின்று ''சித்ரா என்ற பெண் வரைந்த கோலமே சிறந்ததாகக் கொள்ளப்பட்டு அவளுக்கு இந்தப் பத்து ரூபாயைப் பரிசாக அளிக்கிறேன்'' என்றவுடன் கூட்டத்திலிருந்து கரகோஷம் எழுந்தது. வசந்தி மட்டும் மௌனமாக இருந்தாள். சித்ரா மேடைக்குப் போனாள். தலைவர் அவளை நோக்கி, ''நீ வரைந்த இக்கோலத்தைப் பற்றிய விவரங்களை இவர்களுக்குக் கூறு. இக்கோலத்தில் எத்தனை புள்ளிகள் உள்ளன? என்று கேட்டார். சித்ரா ஒரு விநாடி என்ன பதில் கூறுவது என்று தவித்தாலும் பிறகு, ''இதில் மொத்தம் நாற்பது புள்ளிகள் உள்ளன'' என்றாள். தலைவர், ''ஓகோ, அப்படியா? சரி. இதில் புள்ளிகள் ஒன்றுக்குக் கீழே ஒன்றாக அமைந்திருக்கின்றனவா அல்லது இரு புள்ளிகளின் இடையிலாக அமைந்திருக்கின்றனவா?'' என்று கேட்டார்.

இவை ஒன்றையும் கவனிக்காத சித்ராவோ ''புள்ளிகள் ஒன்றுக்குக் கீழ் ஒன்றாக நேர் நேராகவே அமைந்துள்ளன'' என்றாள்.

இதைக் கேட்ட தலைவர் சற்று நிதானித்து, ''சித்ரா! நீ கூறிய இந்த இரு விஷயங்களும் முற்றிலும் தவறானவை. இந்தக் கோலத்தில் மொத்தம் ஐம்பத்தெட்டுப் புள்ளிகள் உள்ளன. மேலும்



புள்ளிகள் இரண்டு புள்ளிகளின் நடுவிலேயே அமைந்துள்ளன. இவற்றை நான் கோலத்தில் நன்கு கவனித்தேன். கோலத்தை நீயே வரைந்திருந்தால் இவற்றை நீ அறிந்திருப்பாய். ஆனால் இதைக் கட்டாயம் வேறொருவரே வரைந்துள்ளார். யார் அந்த நபர்?'' என்று கேட்டார். சித்ரா அவமானத்தினால் குன்றிப் போனாள். ''என்னை மன்னித்து விடுங்கள் ஐயா. இக்கோலத்தை நான் வரையவில்லை. பரிசு கிடைக்க வேண்டும் என்ற பேராசையினால் வசந்தியின் புத்தகத்திலிருந்து அவள் போட்டிக்காகவரைந்து வைத்திருந்த கோலத்தை அவள் அறியாவண்ணம் நான் எடுத்து வந்து என் பெயரை எழுதி இந்தக் கண் காட்சியில் வைத்தேன். அதோ அங்கே அமர்ந்திருக்கிறாள் வசந்தி'' என்று அழுதுகொண்டே கூறி முடித்தாள் சித்ரா. உடனே வசந்தி மேடைக்கு அழைக்கப்பட்டாள். பத்து ரூபாய் பரிசு அவளிடம் கொடுக்கப்பட்டது. சித்ரா வசந்தியிடம் தான் செய்த தவற்றுக்காக மன்னிப்புக் கேட்டாள். வசந்தி அவளைப் பெருந்தன்மையுடன் மன்னித்து விட்டாள்.

சின்னக் காப்பி வேணுமா ...




பெரிய காப்பி வேணுமா ...



தண்ணிக் காப்பி வேணுமா ...



என்ன காப்பி வேணும் ?



புகைப்படங்கள் : நரசிங்கம்

விந்தை இணைப்பு


மோபயஸ் (1790–1869) என்பவர் வியத்தகு உண்மை ஒன்றினைக் கண்டு பிடித்தார். ஒரே ஒரு பக்கம் கொண்ட மேற்பரப்புக்களும் இருக்க முடியும் என்பதுதான் அது. பொதுவாக எந்தப் பொருளின் மேற்பரப்பும் இரண்டு பக்கம் கொண்டதாக விளங்கும். உதாரணமாக சதுர, செவ்வக, வட்ட வடிவம் கொண்ட காகிதத் துண்டுகளைக் கூறலாம். இவைகளுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒரே பக்கம் கொண்ட மேற்பரப்புகளுள் எளிமையானதாகவும், பொருத்தமானதாகவும் விளங்குவது ''மோபயஸ் இணைப்''பாகும்.

நீளமான செவ்வக வடிவம் கொண்ட காகிதத் துண்டினை (உதாரணத்துக்கு 30 செமீ. நீளம் 4 செமீ. அகலம்) எடுத்துக் கொள்ளுங்கள். அதன் நடுவில் (படம் 1) மையக் கோடும், பெயரும் எழுதுங்கள். அதாவது A-க்கு நேர் பின்புறம் D;யும், B;க்கு நேர் பின்புறம் C;யும் எழுதப்பட வேண்டும். பின்னர் காகிதத் துண்டினை 'V' வடிவத்தில் இரண்டு பக்கங்களும் சமமாக இருக்குமாறு இலேசாக மடியுங்கள். இப்போது 'V' அமைப்பினை மாற்றாமல், படம் 2ல் உள்ளதுபோல் அதன் இரண்டு பக்கங்களையும் இலேசாக மடித்துக் கொள்ளுங்கள். பிறகு B முனைமீது பசை தடவி A முனையானது அதன்மீது பொருந்தும்படி ஒட்டுங்கள். சாதாரண வளையம் போன்று அமையாமல் நடுவில் 'ஒரு முறுக்கு' அமைந்த வளையமாக இது இருக்கும். இதுதான் ''மோபயஸ் இணைப்''பாகும். (படம் 3)


மோபயஸ் இணைப்பின் மையத்தில் வெட்டிக் கொண்டே சென்றால், என்ன கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்? இரண்டு தனித் தனியான வளையங்கள் தானே? அதுதான் மோபயஸ் இணைப்பின் தனிச் சிறப்பு. ஒரே நீண்ட வளையம்! இதனைவிட மற்றொரு அதிசயம் என்னவென்றால் கிடைத்த ஒரே நீண்ட வளையத்தினைத் திரும்பவும் மையப்பகுதியில் வெட்டினால் கிடைப்பது ஒன்றுக்குள் ஒன்று இணைந்த இரு வளையங்கள்! என்ன விந்தை பார்த்தீர்களா? இதனை ''மோபயஸ் வளையங்கள்'' என்று கூறுவார்கள்.

சாதாரண வளையத்துக்கு இரு பக்கங்கள் உண்டு. இதுவும் வளையம் போன்றுதானே இருக்கிறது. இதற்கும் இரண்டு பக்கங்கள்தானே இருக்க முடியுமென்று சந்தேகம் தோன்றினால், ''மோபயஸ் இணைப்பின்'' ஒரு பக்கத்திறகு வர்ணம் பூச முற்படுங்கள். முடிவில் உங்களுக்கே அதிசயமாக இருக்கும். அதன் இரு பக்கத்திற்கும் உங்களை அறியாமலேயே வர்ணம் பூசி விடுவீர்கள். இதுதான் ஒரே பக்கம்; கொண்ட மேற்பரப்புடைய மோபயஸ் இணைப்பின் பெருமை.


மோபயஸ் ஜெர்மனியிலிருந்த ஒரு சிறிய வானியல் ஆராய்ச்சி நிலையத்தில் வான ஆராய்ச்சியாளராகப் பதவி வகித்து வந்தார். அவரது 68வது வயதில் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் ''ஒரே பக்கம் கொண்ட மேற்பரப்புகள்''என்ற தலைப்பில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையினைச் சமர்ப்பித்தார். நவீன விஞ்ஞானத்தின் அற்புதமான உண்மைகளைத் தாங்கிய இந்தக் கட்டுரை பல்கலைக் கழகத்தின் பதிவேடுகளில் பல்லாண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. இதே சமயத்தில் தற்செயலாக மோபயஸ் தன்னுடைய ஆய்வுகளைப் பொது மக்கள் மத்தியில் நிரூபித்து ''மோபயஸ் இணைப்பின்'' பெருமையினை விளக்கினார். எது எப்படி இருந்த போதிலும் காகிதமும், கத்தரிக்கோலும் நிலைத்திருக்கும் வரையில் மோபயஸின் பெயரும் புகழும் என்றும் மங்காது ஒளி வீசிக் கொண்டிருக்கும். - தமிழ்ச்செல்வி




படம்.1



படம்.2



படம்.3



மாய மோதிரம்

ஜே. கே. சிவன்

காடும் மலையும் சூழ்ந்த ஒரு பிரதேசத்தில் ஒரு ராஜா இருந்தார். அவர் பேராசையும் சந்தேகமும் கொண்டவர். போதாத குறைக்கு அவருக்குக் குழந்தைகளே கிடையாது. அவருடைய மாளிகையோ பெரியது. அந்த மாளிகைக்குப் பின்புறத்தில் ஒரு பெரிய தோட்டம் வேறு இருந்தது. அந்தத் தோட்டத்தின் ஒரு கோடியில் முனியன் என்ற கிழத் தோட்டக்காரன் தன் மகன் சிங்காரத்துடன் வசித்து வந்தான். முனியன் வெகு நன்றாக வேலை செய்வான். அவன் மகன் சிங்காரம் சிறுவனாக இருந்தாலும் தினமும் ராணிக்கும் அவள் தோழிகளுக்கும் பூச்சரம் தொடுத்துக் கொடுப்பான். ரொம்ப கெட்டிக்காரனும், புத்திசாலியுமான அவனை எல்லாரும் அன்பாக நடத்தினார்கள்.

ஒரு நாள் தோட்டத்தின் எங்கோ ஒரு மூலையில் ஒரு செடியை நடுவதற்காக முனியன் பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தான். திடீரென்று அவனது மண்வெட்டி எதன் மீதோ பட்டு ''ணங்'' என்று ஒலித்தது. ஆச்சரியம் மேலிட்டு மண்ணை விலக்கிப் பார்த்த போது ஒரு கரிய பித்தளைத் தவலை தென்பட்டது. அதை மெதுவாக வெளியே எடுத்து வந்து பார்த்த போது, அதனுள்ளே பழைய காலப் பொன் நகைகளும் ஆபரணங்களும் இருப்பது தெரிந்தது. நடுவே ஒரு சிறிய கிழிசல் துணி மூட்டையும் இருந்தது. முனியன் உடனே வேகமாக ஓடிப்போய் ராஜாவிடம் விஷயத்தைச் சொன்னான். ராஜாவும் மந்திரிகளும் முனியனுடன் தோட்டத்துக்கு விரைந்தனர். மிகுந்த சந்தோஷத்துடன் ராஜா அந்தத் தவலையிலிருந்து நகைகளை எடுத்துப் பார்த்தார். ஆனால் அதனிடையே இருந்த கிழிசல் துணி மூட்டையைக் கண்டதும் முகம் கடுக்க அதைத் தூக்கி எறிந்தார். நகைகள் தவலையோடு அரண்மனைக்குச் சென்று விட்டன என்றாலும் ராஜாவுக்கு முனியன் சில நகைகளை எடுத்து மறைத்து வைத்திருக்கிறானோ என்ற சந்தேகம் தோன்றியது. பாவம் முனியன்! உடனே அவனைக் கட்டிப்போட உத்தரவிட்டார் ராஜா. சில நாழிகை நேரத்தில் அரண்மனையிலிருந்து சில வீரர்கள் அவன் குடிசைக்குச் சென்று, அதிலிருந்த பாத்ரங்கள், துணிகள், உடைமைகள் எல்லாவற்றையும் சோதனை செய்தனர். பிறகு அவற்றை வீசி வெளியே எறிந்தனர்.


சிறுவன் சிங்காரத்துக்கு இதெல்லாம் தெரியாது. வழக்கம்போல் ராணியின் மாளிகையிலிருந்து அப்போதுதான் தோட்டத்தின் வழியாகக் குடிசைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். தோட்டப் பாதை அருகே ஒரு சிறு கந்தல் துணி மூட்டையாகக் கிடக்கவே, அதை ஆவலுடன் எடுத்து அவிழ்த்துப் பார்த்தான். அதனுள்ளே கை ஒடிந்த ஒரு சிறு மரப்பாச்சி பொம்மை இருந்தது. அவனுக்கு அதன் முகம் ரொம்பப் பிடித்து விட்டது. அந்தப் பொம்மையின் தலை உடலைவிடக் கொஞ்சம் பெரிதாகவே அமைந்திருந்தது. மிக்க மகிழ்ச்சியுடன் சிங்காரம் பொம்மையைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

அப்போதுதான் ராஜாவிடமிருந்து சில வீரர்கள் வந்து முனியனைக் கட்டவிழ்த்து விட்டார்கள். அங்கு வந்த சிங்காரமும் முனியனும் அரை நாழிகை நேரத்துக்குள் நாட்டை

விட்டு வெளியேற வேண்டும் என்ற ராஜாவின் உத்தரவைக் கேள்விப்பட்டு முனியனும் சிங்காரமும் அழுது கொண்டே ஊரை விட்டுச் சென்றனர்.

கால் நடையாகவே வெகு தூரம் சென்ற அவர்கள் ஒரு புதிய பிரதேசத்தை அடைந்தனர். இரவு வெகு நேரம் ஆகிவிட்டதால் அங்கேயே தங்கலாம் என்று உத்தேசித்தனர். பசியும் குளிரும் வாட்டின. வெகு அருகில் சில தென்னை மரங்கள் தெரிந்தன. அவற்றில் நிறைய இளநீர்க் காய்கள் காணப்பட்டன. சிங்காரம் முனியனிடம், ''அப்பா! இந்த மரங்களில்தான் நிறைய இளநீர்கள் இருக்கின்றனவே, பறித்துக் கொள்ளலாமா?'' என்றான். முனியன் மிக விசனமாக, ''சிங்காரம், நானோ கிழவன், நீயோ சின்னப் பையன். நம் இருவராலும் மரத்தில் ஏறி இளநீர்களைப் பறிக்க முடியாது. பசியால் நாம் வாட வேண்டியதுதான்'' என்றான்.

அந்த நேரத்தில் சிங்காரத்தின் கையிலிருந்த பைநழுவிக் கீழே விழுந்தது. அதற்குள்ளிருந்து மரப்பாச்சிப் பொம்மை கீழே விழுந்து, தலையும் உடலும் வேறாகி விட்டன. சிங்காரத்துக்கு மனமும் ஒடிந்து விட்டது. அழுது கொண்டே பொம்மையின் தலையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். அப்போதுதான் அதன் கழுத்தின் உட்புறம் ஏதோ ஒரு சிறிய வளையம் இருப்பது தெரிந்தது. அதை அவன் தொட்டவுடன் அது கையோடு வந்து விட்டது. விளையாட்டாக அந்த இரும்பு வளையத்தைத் தன் கைவிரல் ஒன்றில் மாட்டிக் கொண்டான். வயிற்றைப் பசி கிள்ளியது. அவன் குழந்தை மனம் உயரே தெரிந்த இளநீர்களை எண்ணியது. ''என் கைகளுக்கு மட்டும் அவை எட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்று அவன் எண்ணிய மறு கணம் மரம் வளைந்தது! அதிலிருந்த இளநீர்கள் அவன் கைகளுக்கு எட்டியது. முனியனும் சிங்காரமும் முதலில் பயந்து



விட்டனர். திடீரென்று நெடிதுயர்ந்த தென்னைமரம் அவர்கள் முன் தலை குனிந்து வணங்கினால் பயமாக இருக்காதா பின்னே? அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. இருப்பினும் இளநீர்களைப் பறித்து பசியாற உண்டு களித்தனர்.

குளிர் காற்று வீசி அவர்களைத் துன்புறுத்தியது. முனியன் மடியில் சிங்காரம் தூங்க ஆரம்பித்தான். தூக்க வேளையிலும் "நம் குடிசை இங்கிருந்திருந்தால் எவ்வளவு அடக்கமாக இருக்கும்" என்று நினைத்தது அவன் மனம். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் அவர்களுக்கெதிரே ஒரு குடிசை தோன்றியது.. அதில் அவர்களுடைய வழக்கமான படுக்கையும் விரிக்கப்பட்டு இருந்தது. அதிர்ச்சி யடைந்த முனியன் சிங்காரத்தை எழுப்பினான். எப்படியானாலென்ன? அவர்கள் குடிசையே அவர்களைத் 'தேடி வந்திருக்கும்போது கலங்குவானேன்? இருவரும் பொழுது புலரும்வரை ஆனந்தமாக அதில் தூங்கினார்கள்.

மறு நாள் காலை உணவு சமைக்க அவர்கள் ஏற்பாடு செய்வதற்காக அந்த ஜன நடமாட்டமில்லாத பிரதேசத்தில் அலைந்தார்கள். சிங்காரத்தின் காலில் ஒரு கூறிய முள் குத்தியது. அவன் அழுதுகொண்டே "கடவுளே, எங்களை ஏன் அந்த ராஜா இவ்வளவு துன்புறுத்த வேண்டும்? எங்களையும் ஏன் அவரைப் போல் அரண்மனையுடனும், தோட்டத்துடனும், ஆடை ஆபரணங்களுடனும், உணவுப் பண்டங்களுடனும் வாழவைக்கவில்லை? ஏழைகளாய் வசிக்க விட்டு விட்டாயே! அந்த ராஜாவைப் போலவே சுகமாக நாங்கள் வாழ்ந்தால் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருப்போம்!" என்று மனத்தில் நினைத்தான். அவ்வளவுதான்! அந்தக் கணத்திலேயே திடீரென்று ஒரு பெரிய அரண்மனை தோன்றியது. அதில் வீரர்கள் குதிரை மீதும், யானை மீதும் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் அரண்மனையிலிருந்து ஓடிவந்து முனியனையும் சிங்காரத்தையும் வரவேற்றனர். புத்தாடைகளும், வாசனைத் திரவியங்களும் கொண்டு அவர்களை அரசர்கள் போல் அலங்கரித்து அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர். எங்கும் உணவுப் பண்டங்களும், ஆடை ஆபரணங்களும் நிரம்பி யிருந்தன. அவர்கள் யாவரும் முனியன், சிங்காரம் சொல்லும் ஒவ்வொரு வேலையையும் உடனே செய்யத் தயாராக நின்றார்கள். இப்படித் திடீர் சம்பவங்கள் நடப்பதெல்லாம் தான் அணிந்திருக்கும் மோதிரத்தின் மகிமையினால்தான் என்று சிங்காரத்துக்குத் தெரியவில்லை.

முனியன் அவர்களுக்குத் தேவையானவை என்னவென்று கேட்டு வெகு மதியளித்துச் சேவகர்களை மகிழ்வித்தான். சிங்காரத்துக்குப் பெருமிதம் தாங்கவில்லை. அவன் மனம், "இப்போது நம்மை இந்த நிலையில் ராஜா வந்து பார்த்தால் என்ன செய்வார்? தீய குணங்கள் போய், நல்லவராக மாறி இருப்பாரா?" என்று நினைத்தது. சில வினாடிகளில் சேவவர் சிலர் சிங்காரத்திடமும் முனியனிடமும் ஓடிவந்தனர். வாயிலில் சில குதிரைகளின் மீது யாரோ வந்திருப்பதாக அறிவித்தனர். மறு கணம் ராஜாவும் மந்திரிகள் சிலரும் வணக்கம் செய்தவாறே உள்ளே வந்தனர். அவர்களைக் கண்டதும் முனியனும் சிங்காரமும் திடுக்கிட்டு எழுந்து அரசரின் *காலில் விழுந்து வணங்குவதற்காகக் குனிந்தார்கள். ஆனால் அரசர் அவர்களைத் தடுத்துவிட்டார். மிகவும் தழுதழுத்த குரலில் அவர், "முனியா, சிங்காரம்! என்னை மன்னித்து விடுங்கள். நான் பெரிய தவறு செய்து விட்டேன். தோட்டத்தில் கிடைத்த தவலை என்னுடைய முன்னோரின் சொத்து. தவலையின் அடிப்பாகத்தில் "இந்தத் தவலையினுள்ளே இருக்கும் நகைகளும் ஆபரணங்களும் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் அதிருஷ்டசாலிகள். ஆனால் அதில் வைக்கப்பட்டிருக்கும் மரப்பாச்சிப் பொம்மையும், அதன் கழுத்தில் இருக்கும் மாயாஜால மோதிரமும் எவரிடம் உள்ளதோ அவரே பாக்கியசாலி. ஏனெனில் அவர்கள் நினைத்ததெல்லாம் உடனே நடக்கும்" என்று எழுதப்பட்டிருந்தது. என் பேராசையால் எனக்கு அந்தப் பொம்மை சுற்றப்பட்டிருந்த இழிசல் துணிமூட்டை கிடைத்தும் அதை வீசி எறிந்து விட்டேன். ஆனால் அதற்காக நான் இப்போது வருந்தவில்லை. அது நல்லவர்களான உங்களிடம் சேர்ந்து விட்டது, எல்லோருக்கும் நன்மையே. உங்களைத் துன்புறுத்தியதற்குப் பரிகாரமாக உங்களை என் நாட்டிற்கே அழைத்துப் போகப் போகிறேன்" என்று ராஜா கூறினார். அதன்படியே சிங்காரமும் முனியனும் தங்கள் நாட்டுக்கே சென்று விட்டார்கள். பிறகு வெகு காலம் சிங்காரம் அந்த நாட்டின் ராஜாவாகி ஆண்டு வந்தான். எதிரிகள் கூட மாய மோதிரத்தின் பயனைப் நன்பர்களானார்கள். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டிய வசதிகளை எல்லாம் செய்வித்த சிங்காரம், மக்கள் பாராட்டப் பல்லாண்டுகள் வாழ்ந்தானும்.

சேவைக்கு ஒரு சகோதரி

—கிருஷ்ணவேணி

உலகப்படத்தில் கருங்கடலுக்கு மேலே முடிச்சுப் போட்டது போலத் தொங்கிக் கொண்டிருக்கிறதே ஒரு நிலப் பரப்பு, அதுதான் கிரிமியா. இதன் உரிமைக்காகத் துருக்கியும் ரஷ்யாவும் நூற்றிருபது வருஷங்களுக்கு முன் போரிட்டன. துருக்கிக்கு ஆதரவாகப் பிரிட்டனும், பிரான்ஸும் இந்தப்போரில் குதித்தன. பிரிட்டிஷ் மக்களில் ரொம்பப் பேருக்கு இந்தக் கிரிமியாவைப் பற்றி ஏதும் தெரியாது. 1854ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு நாள் அதிகாலையில் பிரிட்டிஷ் மக்கள் தினப்பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தபோது அதிலே துருக்கியில் உள்ள ஸ்கட்டாரி *(Scutari)* என்ற நகரில் உள்ள ராணுவ மருத்துவ மனையில் பிரிட்டிஷ் ராணுவ வீரர்கள் புழுப் பூச்சிகளைப் போலச் செத்துக் கொண்டிருப்பதாகச் செய்தி வெளியிடப்பட்டிருப்பதைப் படித்தார்கள். இப்படிச் செத்துக் கொண்டிருக்கும் வீரர்கள் போர்க்களத்தில் அடைந்த படுகாயத்தினால் இறக்கவில்லை. அப்படியானால் ?

அவர்கள் இறந்து கொண்டிருந்தது நோயினால். சரியான கவனிப்பின்றி அலட்சியப் படுத்தப்பட்டிருப்பதினால். அங்கிருந்த ராணுவ மருத்துவ மனைகளில் தேவையான படுக்கைகள் இல்லை. வேண்டிய மருந்துகள் இல்லை. பசிக்கு உண்ண உணவில்லை. ஏன், குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்பதுகூடக் கஷ்டமாக இருந்தது.

பிரிட்டனின் யுத்த மந்திரியும் இந்தச் செய்தியைப் படித்துவிட்டு வியப்பும் திகைப்பும் அடைந்தார். சிட்னி ஹெர்பர்ட் என்பது அவர் பெயர். இத்தகைய மோசமான நிலையை மாற்றி அமைக்க உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டார் ஹெர்பர்ட். சட்டென்று அவர் நினைவுக்கு வந்தது நைட்டிங்கேல் குடும்பம்தான். அதிலும் அவர்களுடைய மகள் ஃப்ளாரன்ஸின் நினைவுதான் மேல் ஓங்கி நின்றது. நர்ஸாக வேண்டும் என்ற விநோதமான வேட்கை கொண்டிருந்த பெண் அவள். இதில் விநோதம் என்ன என்கிறீர்களா ? நீங்கள் இன்றைக்குக் காணும் நர்ஸ்களைப் போல் அந்தக் காலத்திய நர்ஸ்கள் இருக்கமாட்டார்கள். வீடு கழுவிச் சுத்தம் செய்யும் வேலைக்காரிகளைப் போலத்தான் விக்





டோரியன் காலத்து நர்ஸ்கள் இருந்தார்கள். முறையான படிப்போ, பயிற்சியோ பண்பாடோ கிடையாது அவர்களுக்கு. உயர் குடியில் பிறந்தவர்கள் நர்ஸ்களாகப் பணியாற்ற வருவதென்றால் மகா கேவலம், பயங்கரம்! ஆனால் மிகக் கேவலமாகக் கருதப்பட்ட ஒரு தொழிலை விரும்பி ஏற்க முன் வந்தாள் உயர் குடியில் பிறந்த ஒரு பெண். அந்த விநோதமான ஆசைக்காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தாள் அந்தப் பெண். 'விளக்கேந்தி வரும் மங்கை' என்று அன்போடு அழைக்கப்பட்ட ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் — நர்ஸ்களுக்காக என்ன செய்தார்? அவர் யார்' அவருடைய தொண்டு எத்தகையது?

1829ம் ஆண்டில் மிக உயர்ந்த பணக்காரக் குடும்பத்தில் பிறந்தார். ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல். ஒரு பெண் கற்பனை செய்யக்கூடிய அத்தனை வசதிகளையும் வாழ்க்கையில் அடைவதற்கேற்ற வாய்ப்புள்ள குடும்பம் அது. பெற்றோர்களும் அவள் எல்லாப் பெண்களையும் போல ஒரு சீமானை மணந்து சந்தோஷமாக வாழ்வாள் என்றுதான் எல்லோரும் கருதினார்கள். ஒருநாள் ஃபிளாரன்ஸ் தான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்றும், ஒரு நர்ஸாகப் பணி புரிய விரும்புவதாகவும் அறிவித்த போது பெற்றோர் அதிர்ந்து போனார்கள். அந்தக் காலத்திய நர்ஸ்கள் எப்படி இருந்தார்கள் என்பதை ஆரம்பத்திலேயே கூறி இருக்கிறோமே. ஆகவே ஃபிளாரன்ஸின் பெற்றோர் அவள் விருப்பத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அபூர்வமான மனோ திடம் கொண்டவள் தங்கள் பெண் என்பதை அவர்கள் அறியவில்லை. யாருடைய வேண்டுகோளும் எதிர்ப்பும் பலன் தரவில்லை. தான் நர்ஸாகப் போவதில் ஃபிளாரன்ஸ் மிகவும் உறுதியோடு இருந்தாள். நீண்ட போராட்டத்தின் முடிவில் பெற்றோர் அவள் விருப்பத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. ஃபிளாரன்ஸ் லண்டனில் ஒரு சிறிய நர்ஸிங்ஹோமை நடத்தலானாள். இந்த நிலைமையில்தான் கிரிமியா யுத்தம் மூண்டது.

அப்போது ஃபிளாரன்ஸுக்கு முப்பத்து நான்கு வயது. மருத்துவமனைகளைப் பற்றி இங்கிலாந்தில் உள்ளவர்களுக்குத் தெரிந்ததைவிட அதிகமாக அறிந்திருந்த பெண்மணியாக விளங்கினாள் ஃப்ளாரன்ஸ்.

யுத்த மந்திரி சிட்னி ஹெர்பர்ட்டுக்கு ஃபிளாரன்ஸின் பெயர் நினைவுக்கு வந்த அதே நேரத்தில் ஃபிளாரன்ஸும் போர் வீரர்களின் அவல நிலையைப் பற்றிய செய்தியைப் படித்தாள். ஹெர்பர்ட் ஒரு கடிதம் எழுதினார்-ஃபிளாரன்ஸுக்கு, ''கிரிமியா போர் முனைக்கு நர்ஸ்களின் குழுவோடு சென்று பணி புரிய முடியுமா'' என்று கேட்டு. அதே வேளையில் ஃபிளாரன்ஸ் யுத்த மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதினாள். ''நானும் என்னுடைய நர்ஸ் குழுவும் கிரிமியா போர் முனையில் மிக மோசமாகச் செத்துக் கொண்டிருக்கும் வீரர்களுக்கு உதவுவதற்கு விரும்புகிறோம். எங்களை அங்கு அனுப்ப முடியுமா?' என்று வலுவிலே கேட்டிருந்தாள். எத்தகைய ஒற்றுமை? இரு கடிதங்களும் வழியில் குறுக்கிட்டுக் கொண்டன. யுத்த மந்திரியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரு வாரத்துக்குள் முப்பத்தைந்து நர்ஸ்களோடு — ஃபிளாரன்ஸ் துருக்கிக்குக் கிளம்பத் தயாராகிவிட்டாள். 1854ம் ஆண்டு நவம்பர் மாதம் இன்றைய இஸ்தான்புல் நகரமான அன்றைய கான்ஸ்டாண்டிநோபிளில் வந்து இறங்கினார் ஃப்ளாரன்ஸ்.

ராணுவ ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர்கள் தங்களுடைய உதவிக்குப் பெண் நர்ஸ்கள் வருவதை அறிந்து ஆத்திரமும் ஆச்சரியமும் அடைந்தனர். ராணுவ ஆஸ்பத்திரிகளில் அது வரை பெண் நர்ஸ்கள் பணியாற்றியதில்லை. டாக்டர்களுக்குத் தலைவரான டாக்டர் ஜான் ஹால் என்பவர் நடக்கக்கூடாதது நடந்துவிட்டதைப் போல 'ஹோஹா' என்று உரக்கச் சிரித்தார். ஃபிளாரன்ஸின் சேவையை ஏற்கவில்லை. அது மட்டுமல்ல, அவளைத்திருப்பி அனுப்புவதற்கும் முயன்றார். ஆனால் அவள் இங்கு அனுப்பப்பட்டு இருப்பதற்குப் பின்னணியில் யுத்த மந்திரியின் ஒப்புதல் இருக்கிறது என்பதை அறிந்தபோது ஹாலின் ஆர்ப்பாட்டங்கள் அடங்கிப் போயின. ஆனாலும் ஃபிளாரன்ஸின் குழுவுக்கு எத்தனை தொல்லைகளைத் தரலாமோ அத்தனையும் கொடுத்தார்.

ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் அழகி, அறிவாளி, மிகுந்த சகிப்புத் தன்மை கொண்டவள், எதையும் இலேசாக எடுத்துக் கொண்டு இன்முகத்தோடு இருக்கப் பழகியவள். எல்லாவற்றுக்கும் மேலாக எடுத்த காரியத்தை முடித்தே தீரும் திடசித்தம் கொண்டவள். ஜான் ஹாலின் அடாவடியைத் தவிடு பொடியாக்கினாள் ஃபிளாரன்ஸ். அது எப்படி என்பதைச் சொல்லுமுன் அவள் அங்கு போன போது ராணுவ மருத்துவ மனை எப்படி இருந்தது என்பதைப் பார்ப்போம்.





கிரிமியா யுத்தத்திலே காயம் அடைந்த வீரர்கள் ஸ்கட்டாரியில் உள்ள துருக்கி ராணுவ பாரக்ஸில் பரிதாபமான நிலையில் இருந்தார்கள். நான்கு மைல் நீளத்துக்கு நோயாளிகளுக்கான படுக்கைகள் இருந்தன. ஆனால் அந்த முகாமோ மிக மிக மோசமானதாக இருந்தது. சுத்தம் என்பதே எங்கும் இல்லை. காயம் அடைந்த பல வீரர்கள் தரையில் புழுதியிலும் அசிங்கத்திலும் உழன்று கொண்டிருந்தனர். போதுமான படுக்கைகள் இல்லை. விரிப்புக்கள் இல்லை. உணவு இல்லை. மருந்துகள் இல்லை. அம்மாதிரியான ஒரு சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது என்றே அங்கிருந்த எந்த அதிகாரிகளுக்கும் தெரியவில்லை. நினைக்க முடியாத அளவுக்குப் பயங்கரமாக இருந்தது. ஒவ்வொரு மருத்துவ மனையிலும் போர் வீரர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். சகிக்க முடியாத துர்நாற்றம்.

இத்தனை மோசமான நிலையைக் கண்ட பிறகும் ஃபிளாரன்ஸ் கலங்கவில்லை. மனம் தளரவில்லை. எவ்வித எதிர்ப்பையும் ஏளனத்தையும் உதாசீனத்தையும் பொருட்படுத்தவில்லை. அந்தச் சூழலை ஒழுங்குடுத்துவதில் உடனே இறங்கினாள். சோப்பும் பிரஷ்ஷும் கொண்டு வரச் சொன்னாள். ஆஸ்பத்திரி முகாம் முழுவதையும் கழுவிச் சுத்தமாக்க முனைந்தாள். துணிகளைச் சலவை செய்து தருவதற்கான லாண்டரியைத் துவக்கினாள். நோயாளிகளின் ஆகாரத்தை அபிவிருத்தி செய்தாள். காயம் அடைந்த வீரர்கள் தக்கபடி கவனிக்கப்பட்டனர். நேயாளிகளுக்கு சோப்பு, கத்தி, முள் கரண்டி, சீப்பு, டூத் பிரஷ் இத்தனையும் முதன் முறையாக அளிக்கப்பட்டது. காயமடைந்த வீரர்களின் கண்ணீர் காய்ந்தது. களிப்பு மலர்ந்தது.

டாக்டர் ஜான் ஹால் ஃபிளாரன்ஸை அங்கீகரிக்கவே இல்லையே— அவளுக்கும் அவள் குழுவுக்குமே கூட உணவு ரேஷன் தர மறுத்தாரே! அப்படி இருக்க இத்தனையையும் எப்படி ஃபிளாரன்ஸினால் செயலாக்க முடிந்தது? ஜான் ஹால் அந்தச் சின்னஞ் சிறு அழகியை அலட்சியமாக மதிப்பிட்டு விட்டார். அவள் செல்வச் சீமாட்டி என்பதையோ லண்டனில் ஃபிளாரன்ஸினுடைய சேவைக்கு ஊக்க மூட்டும் வகையில் ஒரு பத்திரிகை மக்களின் ஆதரவை வளர்த்து வருவதையோ அவர் அறியவில்லை. தனது சொந்தப் பணத்திலும் பொதுமக்கள் திரட்டி அனுப்பிய நிதியிலிருந்தும் ராணுவ ஆஸ்பத்திரிக்குத் தேவையான படுக்கை, விரிப்பு, சட்டைகள், கால் உறைகள், சாப்பாட்டு உபகரணங்கள், வைத்திய சாதனங்கள் அத்தனையையும், யாருடைய தயவும் இன்றி வரவழைத்து விட்டாள். ஒத்துழைக்க மறுத்த டாக்டர்கள் அசந்துபோனார்கள். நாளின் 24 மணி நேரத்தில் 20 மணி நேரங்களை நோயாளிகளிடையே கழித்தாள். இரவு வேளைகளிலும் கூட வார்டு வார்டாக கையில் விளக்கு ஏந்தி எல்லாரும் சரியாகக் கவனிக்கப் பட்டிருக்கிறார்களா என்று தானே சுற்றிப் பார்த்தாள்.

டாக்டர்கள் அவளை வெறுத்தாலும் நோயாளி வீரர்கள் அவளைத் தேவதையாகக் கருதினார்கள். அவளுடைய நிழலை முத்தமிட்டுத் தங்கள் நன்றிப் பெருக்கைக் காட்டினார்கள். மிகக் கேவலமாக நடத்தப்பட்ட தங்களுக்கு வாழ்வளித்த அவளை, வீரர்கள் தெய்வமாக மதித்தார்கள். ரொம்பப் பேருக்கு அவளுடைய பெயர் தெரியாது. ஆகவே அவளை 'விளக்கோடு வரும் மங்கை' ***(Lady with a lamp)*** என்றே அன்போடு அழைத்தார்கள்.

ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் அழகி. காயம் அடைந்த வீரர்களிடம் கருணையோடும் கனிவாகவும் பழகக் கூடியவள்தான். ஆனால் மற்றவர்களுக்கோ அவள் அச்சமூட்டும் அணங்கு. ஆச்சரியமான மனோதிடமும், தன்னம்பிக்கையும் கொண்ட ஃபிளாரன்ஸ் தன் ஆணைக்கு அடங்கி எல்லோரும் நடக்க வேண்டும் என்ற பிடிவாதம் கொண்டவள். தன்னைப் போலவே மற்றவர்களும் சலியாது உழைக்க வேண்டும் என்று நினைப்பவள். இத்தகைய குணங்கள் இல்லாவிட்டால் அவளால் ஸ்கட்டாரியில் நூற்றுக்கு 42 பேர் இறந்து கொண்டிருந்த நிலைமையை மாற்றி ஒரு மகத்தான சாதனையைச் செய்திருக்க முடியுமா?

உழைப்பு, உழைப்பு, உழைப்பு! சேவை, சேவை, சேவை! கிரிமியப் போர்க் களத்திலிருந்து காயமடைந்த வீரர்களைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருந்தார்கள். காலிழந்தவர்கள், கையிழந்தவர்கள், காலரா, சீதபேதி இன்னும் பல வியாதிகளால் பாதிக்கப்பட்டவர்களும் தினம் தினம் வந்து கொண்டிருந்தார்கள். நிர்வாகிகளிடம் வைத்தியசாலையை விரிவு படுத்தும்படி கேட்டுக் கொண்டாள். அரசாங்கத்தின் அனுமதியின்றி அது சாத்தியமில்லை என்று கூறிவிட்டார்கள். அரசாங்க அனுமதி பெறுவதானால் பல மாதங்களாகும். ஃபிளாரன்ஸ் உடனே துணிவுடன் செயல்பட்டாள். இருநூறு



துருக்கியர்களை வேலைக்கு அமர்த்தி ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் வேலையை வேகமாகச் செய்யச் செய்தாள். அதற்கான செலவு, கூலி ஆகியவைகளைத் தானே கொடுத்தாள்.

அத்தனை பெரிய மருத்துவ மனை முழுவதையும் தானே கண்காணித்து வந்ததோடு தினம் தினம் ஏராளமான கடிதங்களையும் எழுதிக் கொண்டிருந்தாள் நிதி உதவி வேண்டி. ராணுவத்தினரால் உணவு, உடை மற்ற சௌகரியங்களைத் தர முடியாதபோது தானே அவைகளை வரவழைத்து வழங்கினாள். இப்படி அயராது உழைத்து இறப்பைத் தடுத்து நிறுத்திய ஃபிளாரன்ஸின் உடல் நலம் கெட்டது. கிரிமிய யுத்தம் முடிந்தது. இங்கிலாந்து மக்கள் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேலுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கக் காத்திருந்தார்கள். ஆனால் இத்தகைய விளம்பரங்களை விரும்பாதவள் ஃபிளாரன்ஸ். தவிர ஆரவாரமான பாராட்டு வைபவங்களில் கலந்து கொள்ளும் நிலையிலும் அவள் இல்லை. ஆகவே யாரும் அறியா வண்ணம் கடத்தப்பட்ட பொருளைப் போல் ரகசியமாக அவளைத் தாய்நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். அப்போது அவளுக்கு வயது முப்பத்தாறு. அந்த மோசமான நிலையில் அவள் அதிக நாள் வாழ மாட்டாள் என்று தான் எல்லோரும் நினைத்தார்கள். அவர்கள் கணிப்புப் பொய்த்தது. அதன் பிறகு ஐம்பத்து நான்கு ஆண்டுகள் உயிர் வாழ்ந்து தமது தொண்ணூறாவது வயதிலேயே காலமானார் ஃபிளாரன்ஸ். அத்தனை வருஷங்களும் நடமாட்டம் இல்லாமல் படுக்கையில் இருந்தபடியே மருத்துவமனைகளையும் நர்ஸ்களையும் சீர்திருத்தம் செய்வதற்காக உழைத்தார்.

ஸ்கட்டாரியில் ஃபிளாரன்ஸ் காட்டிடிய தீரமும் செய்த சேவையும் உலகப் புகழ் பெற்றது என்றாலும் அதன் பிறகு அவள் ஆற்றிய பணிகள் மக்கள் நலனுக்கு மகத்தான வழிகாட்டிகளாயின. நாட்டில் உள்ள எல்லா மருத்துவக் கூடங்களும் சுத்தமாகவும் வசதியோடும் செயல்பட வேண்டும் என்பதற்குப் பல திட்டங்களை வகுத்தார். அதற்கு முக்கியமாக லண்டனில் உள்ள செயிண்ட்



தாமஸ் மருத்துவ மனையில் நர்ஸ்களை உருவாக்கும் பள்ளி ஒன்றை ஆரம்பித்தார். ''நர்ஸ்களுக்குப் பயிற்சியாவது, பள்ளியாவது, பைத்தியக்காரத்தனம்! நர்ஸுகள் வெறும் வீட்டு வேலைக்காரிகள்தான்'' என்று ஏளனமாக நகைத்தார் அந்த மருத்துவ மனையின் ஒரு சர்ஜன்.

நர்ஸ்கள் என்போர் விசேஷமான குணமுடையவர்கள் என்பதில் ஃப்ளாரன்ஸுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அவர்கள் புத்திசாலிகளாகவும் நன்னடத்தை உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். அப்போதுதான் டாக்டர்களும் நோயாளிகளும் அவளிடம் பூரண நம்பிக்கை கொள்ளுவார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் மனப்பூர்வமாக சேவை செய்ய வேண்டும். இதற்காக ஃப்ளாரன்ஸ் வகுத்த விதி முறைகள் மிகவும் கடுமையானவை. முதலில் அவர்கள் நர்ஸ்களாகவும் பிறகுதான் பெண்களாகவும் இருக்க வேண்டும் என்று கூறுவார். நன்கு பயிற்சி பெற்ற நர்ஸ்கள் இல்லாமல் டாக்டர்களால் எது

வும் செய்ய முடியாது என்ற ஒரு நிலையை விரைவிலேயே உண்டாக்கிக் காட்டினார் ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல். மனோதிடம், உறுதி, சலியாத உழைப்பு இவைகளினால் டாக்டர்களிடையே மதிப்பையும் உலக மக்களிடையே ஓர் உன்னதமான ஸ்தானத்தையும் பெற்றார். உலகின் பல பாகங்களிலிருந்தும் அவரது அரிய ஆலோசனைகளைக் கேட்டுக் கடிதங்கள் வந்த வண்ணமிருந்தன. முடிவில்லாத கடிதங்களையும் நீண்ட அறிக்கைகளையும் தன் வாழ்நாளின் கடைசிவரை எழுதிக் கொண்டே இருந்தார், நடமாட முடியாத நோய்வாய்ப்பட்ட நிலையிலும்.

பிரிட்டனும் ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேலைத் தக்கபடி கௌரவித்துப் பட்டமளித்துப் பாராட்டித் தன்னை உயர்த்திக் கொண்டது.

இன்று சமூகத்தில் நர்ஸ்களுக்கு ஒரு கௌரமான இடம் இருக்கிறதென்றால் அது ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேலின் உழைப்பினால், தியாகத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.

சிரிக்க

சோமு: எங்கள் கடை ரொட்டியை இந்த ஊர் பயில்வான் பக்கிரிசாமி விரும்பிச் சாப்பிடுகிறார்.

பாலு: அப்படியா? எங்கள் கடை ரொட்டியைச் சாப்பிடுவதற்கு யாரும் பயில்வானாக இருக்க வேண்டியதில்லை.

- ஆர். மணிவண்ணன்



நோயாளி: டாக்டர் இந்தப் பல் ரொம்ப நன்றாக ஆடுகிறது.

பல் டாக்டர் (எங்கோ நினைவாக) அப்படியா? எப்போது அரங்கேற்றம்?

- வி. வி. பூர்ணிமா



ஒருவர்: இந்த ஓட்டலில் எதுவுமே சூடாக் கிடைப்பதில்லையே! ஏன்?

மற்றவர்: ஓட்டல் பேரைப் பாருங்களேன், ஞெர்கிறது. - ஆனந்த்



சோமு: ஏய், எங்க தாத்தாவும் அப்பாவும் வாக்கிங் போறாங்கடா.


தாமு: உங்க சொந்த ஊர் வத்தலக்குண்டுதானே....? - கொ. வெங்கடசாமி



சர்வர்: சூடான இட்லி, சூடான தோசை, சூடான சட்னி, சூடான வடை, சூடான காப்பி....

குப்பு: முதல்லே 'மணி கபே'ங்கற உங்க ஹோட்டல் பெயரை 'சூடா - மணி கபே' என்று மாத்தி வைத்துவிட்டு வா.


ஏராளமான போர்ப்படைகளை அழித்து நாசம் செய்தார் ஹனுமான். ராவணனின் மகனான அட்சயகுமாரனும் இறந்தான். அற்பக் குரங்குக்கு இத்தனை பலமா என்று வியந்து ராவணன் இந்திரஜித்தை அனுப்பினான்.
பிரம்மாஸ்திரம் என் மீது பிரயோகிக்கப்படுகிறது. அதனால் எனக்கு அபாயம் இல்லை. எப்படியும் ராவணனை நான் வதைக்கப் போவதில்லை. அது என் பிரபுவின் காரியம். வந்ததற்கு இவ்வளவு படை பலத்தைப் பார்த்தாயிற்று. இப்போது இந்த அஸ்திரத்துக்குக் கட்டுப்படுவோம்.
22
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: விஜு
பிரம்மாஸ்திரத்துக்குத் தானாகக் கட்டுப்பட்ட ஹனுமானைக் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள்.
ஹா.. ஹா.. ஹா! பிடிபட்டது குரங்கு. இதைக் கட்டி இழுத்து வாருங்கள் ராஜ சபைக்கு!
ஏ, குரங்கே நீ யார்? எதற்காக வந்தாய்?
நான் ஸ்ரீராமபிரானின் தூதன். வானர மாவீரன் சுக்ரீவனின் மந்திரி. ஒரு ராஜதூதனை நீ இப்படி நிறுத்திவைத்து விசாரிப்பது ராஜ நீதி யல்ல.
ஹா.. ஹா.. ஹா! அற்பக் குரங்கே! உன்னை உசிரோடு நிறுத்தி வைத்திருப்பது தவறுதான். என் காலின் கீழ் போட்டு மிதித்திருக்க வேண்டும்.
இந்த அற்பக் குரங்குகளின் மூலம் ஸ்ரீராமன் எத்தனை அற்புதம் செய்யப் போகிறார் என்று பார். எனக்கு நீ ஆசனம் கொடுக்காவிட்டாலும் இதோ நானாக எனக்குரிய ஆசனத்தை உருவாக்கிக் கொள்கிறேன்.


ராவணேசுவரா! ஸ்ரீ ராமபிரானிடம் சீதாதேவியை ஒப்படைத்து அவரிடம் தஞ்சம் புகுந்து அபயம் பெறப் போகிறாயா அல்லது போர் செய்து மாளப் போகிறாயா? இதை அறிந்து போக வந்த தூதன் நான்.
முட்டாள் குரங்கே! கேவலம் ஒரு நரனான அந்த ராமனா என்னைக் கொல்லப் போகிறான்? ஏ, வீரர்களே! இன்னுமா இந்தக் குரங்கை உயிருடன் விட்டிருக்கிறீர்கள். கண்ட துண்டமாக......
அண்ணா! தூதுவனைக் கொல்வது தர்மமல்ல. உன் மறுமொழியைக் கூறி இவனை அனுப்புவது தான் நியதி!
விபீஷணனின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டான் ராவணன்.
ஆனால் இவன் தூதனாக மட்டும் வரவில்லை. அசோக வனத்தை அழித்து என் மகனையும் கொன்ற இவனுக்குத் தக்க தண்டனை அளிக்காமல் அனுப்பக் கூடாது. கோட்டை கட்டி அமர்ந்திருக்கும் இதன் வாலுக்குத் தீ மூட்டுங்கள். வாலில்லா வானரமாகத் திரும்பட்டும்.
இனி ரகசிய நெய்ய நான் விரும்பவில்லை வாலைக் கொளுத்தினால் கொளுத்தட்டும்.
ஸ்ரீ ராமதூதனின் வாலுக்குத் தீயிட்ட செய்தி சீதைக்கு எட்ட, அவள் அக்கினி பகவானைத் துதிக்கிறாள். ஹனுமானுக்குத் தீ சுடக் கூடாது என்று, கற்பரசியின் வேண்டுகோள் அல்லவா? ஹனுமானின் வாலில் குளிர்ச்சி ஏற்படுகிறது. அவர்களிடமிருந்து திமிறிக் கிளம்புகிறார் மாருதி. இலங்கைக்குத் தீயிட்டு வேடிக்கை பார்க்க.
எனக்கிட்ட நெருப்பை இவர்களுக்கே வட்டி போட்டுத் தருகிறேன்.
தொடரும்

அளவுக்கு மீறினல் அமிர்தமும் நஞ்சு

பிரேம் சங்கர்

மணியும் கோபுவும் பள்ளி இறுதி வகுப்பில் முதல் தரமாகத் தேறியிருந்தார்கள். வேலைக்காக அவர்கள் பல இடங்களில் மனுச் செய்திருந்தார்கள். திடீரென்று இருவருக்கும் ஒரே அலுவலகத்திலிருந்தே தேர்வுக்கு வரும்படி அழைப்பு வந்து விட்டது.

எப்போதும் அவர்களிடையே கடுமையான போட்டி நிலவுவது வழக்கம்.

கோபுவின் வீட்டில் வசதி இருந்தது. மேற்கொண்டு கல்லூரிப் படிப்பைக்கூட அவன் தொடரலாம். ஆனல் மணி வீட்டிலோ நெருக்கடி. மணி வேலைக்குப் போனல்தான் வீட்டில் ஓரளவுக்குக் கஷ்டம் நிவர்த்தியாகும் போலிருந்தது.

வேலை கொடுக்கப் போகும் கம்பெனியில் தேர்வுக்கு வந்தவர்களில் பலரைச் சாமர்த்தியமாகக் கழித்துக் கட்டி விட்டார்கள். எஞ்சி நின்றவர்கள் மணியும் கோபுவும்தான். இருவருக்கும் எழுத்து மூலமாக ஒரு தேர்வு வைத்தார்கள்.

விடைத் தாள்கள் திருத்தப்பட்டு மதியம் இரண்டு மணிக்கு வயதான மானேஜர் அவர்களை ஒருங்கே அழைப்பதாகச் செய்தி வந்தது.

''நீங்கள் இருவருமே ஓ
மதிப்பெண்கள் பெற்றிருக்கிறீர்கள்
நான்கு மணிக்கு கம்பெனி டைரக்ட
உங்களை வாய்மொழியாகச் சோதன
செய்வார் போலத் தோன்றுகிறது
அதிலும் நீங்கள் சோடை போக மா
டீர்கள் என்று எனக்குத் தெரியு
உங்கள் இருவரையுமே எனக்குப் பிடி
திருக்கிறது. ஆனல் வேலைஒன்றுதானே
உங்களில் யாராவது விட்டுக் கொடுத்
விட்டால் என்ன?'' என்றார் மானேஜ

''கோபு! உன் நிலைமையில் நா
இருந்தால் மேற்கொண்டு கல்லூரியி
சேர்ந்து படிக்காமல் விடமாட்டே
நீ என்னுடன் போட்டியிடுவதைப் பற்
எனக்கு ஆட்சேபனை இல்லை. எ
நிலைமையை உத்தேசித்து நீ விலகி
கொண்டால் என்ன?''. என்றான் மண

கோபு ஏளனமாகச் சிரித்தான். ப
லொன்றும் சொல்லவில்லை.

நான்கு மணிக்கு டைரக்டர் கேட்
கேள்விகளுக்கு இருவருமே நன்
விடையளித்து விட்டார்கள். மு
சொல்ல முடியாமல் அவரும் தி
றினர். மணியே முந்திக்கொண்டா



''சார்! என் நண்பன் கோபுதான் இந்த வேலைக்கு மேலானவன். தகுதி யானவன்'' என்றான்.

''மணி! நீ ஒன்றும் பிச்சையிட வேண்டாம். என்னுடைய அதிர்ஷ்டத்தைப் பற்றி எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது!'' என்று இரைந்தான் கோபு.

''எதற்குச் சண்டை போடுகிறீர்கள்? நான் இன்னொரு கேள்வியைக் கேட்க மறந்துபோய்விட்டேன். அதற்கு யார் பொருத்தமாக விடையளிக்கிறீர்களோ அவருக்குத்தான் இங்கு வேலை'' என்றார் டைரக்டர்.

இருவரும் தயாராக இருந்தார்கள்.

''வட நாட்டில் ஒரு கிளை திறப்பதாக இருக்கிறோம். அங்கு போய் வேலையை யார் ஒப்புக்கொள்வீர்கள்?'' என்று கேட்டார் டைரக்டர்.

கோபு மணியை முந்திக் கொண்டு ''இதென்ன பிரமாதம்! நீங்கள் சந்திர மண்டலத்திலேயே ஒரு கிளை திறந்து வேலையை ஒப்புக் கொள்ளச் சொன்னால் கூட நான் தயார்தான்'' என்றான்.

''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது பொன்மொழி அல்லவா? நீங்கள் எங்கே வேலை கொடுத்தாலும் நான் போகத் தயார் சார்!'' என்றான் மணி.

டைரக்டர் சிரித்துக் கொண்டே கூறினார்: ''மிஸ்டர் கோபு! சந்திர மண்டலத்தில் கிளை திறக்கும்போது அவசியம் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன். இப்பொழுது எங்களுக்கு அந்த யோசனை இல்லை. நீங்கள் போய் வரலாம்!''

பிறகு மணிக்கு எளிதில் வேலை கிடைத்து விட்டது. என்று சொல்லவும் வேண்டுமா?





அழகும் அழுகையும்

மன்னர் தைமூரிடம் நாஸிருதீன் கோஜா என்பவர் விகடகவியாக இருந்தார். மன்னர் தைமூர் கால் ஊனமானவர் - பார்ப்பதற்கும் விகாரமாக இருப்பார். ஒரு தடவை தைமூர் தம் உருவத்தைக் கண்ணாடியில் பார்க்க நேர்ந்தது. விகாரமான தமது முகத்தைக் கண்டு தேம்பித் தேம்பி அழலானார். மன்னர் அழுவதைக் கண்டு சபையிலுள்ளோர் அனைவருமே அழுதார்கள்.

சிறிது நேரத்தில் தைமூர் அழுகையை நிறுத்திவிட்டு அமைதியானார். சபையிலும் அமைதி நிலவியது. ஆனால் நாஸிருதீன் கோஜா மட்டும் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார். ஆச்சரியமுற்ற தைமூர், ''நீ மட்டும் ஏன் இன்னும் அழுது கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''மன்னா! சிறிது நேரம் கண்ணாடியில் உமது முகத்தைப் பார்த்துவிட்டு ஒரு மணி நேரம்வரை நீங்கள் அழுதீர்கள். அப்படியிருக்க, உங்கள் முகத்தைக் காலமெல்லாம் நான் பார்க்க வேண்டியிருக்கிறதே, நான் அதிக நேரம் அழுவதில் வியப்பென்ன இருக்கிறது?'' என்று நாஸிருதீன் கோஜா விடையளிக்க, மன்னர் தம்மை மறந்து சிரித்து விட்டார்.

ஆதாரம்: ''பிறை'' — ஆர். கே. நிஜாம்


நன்றாக ரசியுங்கள்

அறிஞர் பெர்னாட் ஷாவைக் காண வந்த ஒரு சீனர் அவரது அழகை வர்ணிக்கலானார். ஷா ''ஆமாம், என் பற்கள் எப்படி என்று சொல்லுங்கள்?'' என்றார் கண் சிமிட்டியவாறு.


''ஆகா! உங்கள் பற்கள் வெண்மையானவை - அழகு பொருந்தியவை; உறுதியானவை'' என்று சீனர் வர்ணித்துக் கொண்டிருக்கும்போதே பெர்னாட் ஷா தமது பல் செட்டைக் கழற்றி அவர் கையில் கொடுத்து, ''இதை இன்னும் நன்றாக ரசியுங்கள்' என்றார் சிரித்தவாறே.

ஆர். கே. நிஜாம்





பலே பாலுவும் பாட்டில்பூதமும் 5
கதை: வாண்டு ~ சித்திரம்: செல்லம்
பாலு கிரிக்கெட் மாட்ச் ஆடுகிறான்!
டேய், நானும் வரேண்டா, என்னையும் சேர்த்துக்கங்கடா.
போடா மண்டு. உனக்குக் கிரிக்கெட்டைப் பத்தி என்னடா தெரியும்?
ஏய்குள்ளக் கத்தரிக்கா!
ஷேம்... ஷேம்
பாலு அவர்களுக்குச் சுடச் சுடப் பதில் சொல்ல, நிலைமை மோசமாகிறது.
பிரபுவே! அவர்களோடு ஏன் வம்பு? நாம் போகலாம் வாருங்கள்.
உங்களுக்கு மீன் பிடிக்கத் தெரியுமா? இதோ தூண்டில் தயார் செய்கிறேன்.
கயிறும் முள்ளும் தயார்.
ஐயே! இதென்ன, அறுந்த பூட்ஸ் அல்லவா? அழகான வாளை மீன் வருமென்று நினைத்தேனே!
வருத்தப்படாதீர்கள் பிரபுவே! அதை மேலே தூக்குங்கள்.
ஹேர்தில்! இதற்குள் கிரிக்கெட் பால்! என்ன அதிர்ஷ்டம்?
இது தான் கிரிக்கெட் பந்தா?
பந்து கிடைத்ததும் கம்புகளை வெட்டி, ஸ்டம்புகள் தயாரித்துக் கிரிக்கெட் விளையாட முனைகிறான் பாலு.
ஐயோ! இந்தப் பழைய மட்டை இப்படிக் காலை வாரிவிட்டதே!


நீங்கள் பந்து வீசுங்கள். என் பட்டாக்கத்தி இருக்கிறது மட்டையாக.... ஓ....பந்து எங்கே?
எங்கோ விழுந்தது....
இந்தப்புல்லிலும் புதரிலும் எங்கே தேடுவது?
... அதோ முரட்டுக் காளை... உஷார்!
என்னிடமா உன் பலத்தைக் காட்டுகிறாய்?
டேய், பாவுவின் வேலைக்காரன் அந்த முரட்டுக் காளையை எப்படி அடக்கி மடக்கிப் போட்டு விட்டான் பாருடா!
இதோ பந்து... இங்கே...
ஹிப் ஹிப் ஹுர்ரே! வெல்டன்.
கம் ஆன் பாவு! கன்கிராட்ஸ்
ஷேர்தில்லின் வீரம் கண்டு பூரித்துப் போன கிரிக்கெட் கிளப் பையன்கள் பாவுவையும் தங்களுடன் விளையாட அழைக்கின்றனர்.
பிரமாதமா ஆடறானே பாவு! சபாஷ்டா...
தொடரும்

காற்றடிக்குது

வெப்ப நாடுகளில் கடும் வேகத்துடன் வீசும் சுழல் காற்றைத்தான் புயல் எனப் பொதுவாகக் கூறுகிறார்கள். இந்தப் புயலை ஆங்கிலத்தில் சைக்ளோன் (Cyclone) எனச் சொல்லுவார்கள். சுழற்சியை ஆங்கிலத்தில் சைக்ளிங் எனக் கூறுவார்கள். இதனால் தான் சுழல் காற்றுக்குச் சைக்ளோன் எனப் பெயர் இடப்பட்டது. 1855க்கு முன்பு ஆங்கிலத்தில் சைக்ளோன் என்ற ஒரு வார்த்தை கிடையாது. அவ்வாண்டுதான் நம் நாட்டில் கல்கத்தாவில் அந்த நகர நிர்வாகியாக இருந்த ஹென்றி பெடிங்டன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ''ஸெய்லர்ஸ் ஹாண்ட் புக்'' (Sailors' Hand book)கில் முதன் முதலாக வங்காள குடாக் கடலில் வீசும் சுழல் காற்றுக்கு சைக்ளோன் எனப் பெயர் குறிப்பிட்டார்.

மற்ற நாடுகளில்

உலகிலேயே மிக அதிகமாகப் புயலால் தாக்கப்படும் நாடு இந்தியா.. புயல் உருவாகும் கடல் வங்காள விரிகுடாவாகும். ஆனால் உலகில் வேறு பல வெப்ப தேசங்களிலும் புயல்கள் வீசுவதுண்டு. மேற்கு இந்தியத் தீவுகள் உள்ள கரீபியன் கடல், பசுபிக் மகா சமுத்திரம் ஆகிய பகுதிகளில் வீசும் புயலை ஹரிக்கேன் (Hurricane) எனக் கூறுவார்கள். நாம் உபயோகிக்கும் ஹரிக்கேன் லாந்தருக்கு அப்பெயர் வரக் காரணம் ஹரிக்கேன் புயலிலும் அதை எடுத்துச் செல்லலாம் அது அணையாது என்பதினால்தான். சீனக் கடல் பகுதியில் வீசும் புயலுக்கு டைஃபூன் (Typhoon) எனப் பெயர். இந்து மகா சமுத்திரப் பகுதியில் வீசும் புயல் சைக்ளோன் எனப்படும்.

உற்பத்தி

உலகைச் சுற்றியுள்ள வாயுவை விஞ்ஞானிகள் வெப்ப வாயு, குளிர் வாயு என்று இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். ஓரிடத்தில் உள்ள வாயு வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க லேசாகிறது. அப்படி லேசாகும்போது அது மேல் நோக்கிச் செல்லுகிறது. அப்போது ஏற்படும் காலி இடத்தை நிரப்ப அங்கு குளிர் காற்று செல்லுகிறது.

வெப்பக் காற்று அழுத்தக் குறைவானது. ஆகவே வெப்பக் காற்றுப் பகுதியைக் காற்று அழுத்தத் தாழ்வு மண்டலம் (Lows or Depressions) எனக் கூறுவார்கள். இந்தக் காற்று அழுத்தத் தாழ்வு மண்டலத்தை நோக்கி குளிர் காற்று ஓடும்போது அது நேர் திசையில் அவ்விடத்தை அடைந்து விட முடிவதில்லை. ஓய்வு ஒழிச்சலின்றி பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருப்பதால் அதற்கேற்ப அந்தக் காற்று வட்ட வடிவத்தில் சுழற்சியடைகிறது. இதனால் அது சுழல் காற்றாக உரு மாற்றம் அடைகிறது. வட கோளார்த்தத்தில் (Northern Hemisphere) இக்காற்று அப்பிரதட்சணமாகவும் தென் கோளார்த்தத்தில் பிரதட்சணமாகவும் சுழற்சி அடைகிறது. இப்படிச் சுழற்சி அடையும் காற்றே புயல் எனப்படுகிறது. மேற்குக் கோளார்த்தத்தில் மெக்ஸிகோ குடாவிலும், கிழக்கு கோளார்த்தத்தில் வங்காள குடாவிலும்தான் புயல் மிகுதி.

புயல் உற்பத்தியாவது எப்படி என்பது குறித்து நீண்ட நாட்களாக உலகில் விஞ்ஞானிகளிடையே பலவிதக் கருத்துக்கள் நிலவி வந்தன. சமீபத்தில் ஹோம், நேபியர், வியர்கனேஸ் ஆகிய மூன்று விஞ்ஞானிகள் புயல் எப்படி உற்பத்தியாகிறது என்பதை உணர்ந்தார்கள். இதை ஆதாரமாகக் கொண்டு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாவதையும் அதன் காரணமாக புயல் உற்பத்தியாவதையும் பருவநிலை விஞ்ஞானிகள் அறிந்து இப்போது கூற முடிகிறது. ஆனால் புயல் எந்தப் பக்கமாக வீசப் போகிறது, எந்த எந்த நிலப் பகுதி அதன் தாக்குதலுக்கு உள்ளாகப் போகிறது எனத் தீர்மானமாக அவர்களால் முன்கூட்டியே அறிந்து அறிவிக்க முடியவில்லை. உத்தேசமாகவே இதை அவர்கள் இப்போது கூற முடிகிறது.



கடல் குமுறுது

— அ. ராம்கோபால்

வங்காளக்குடா

உலகிலேயே மிக அதிகமாகப் புயல் உருவாகும் வங்காளக் குடாக் கடலிலும் அரபிக் கடலிலும் 1891 தொடங்கி 1970 வரையிலான 80 வருட காலத்தில் 184 பெரும் புயல்கள் தோன்றிப் பயங்கரச் சேதங்கள் விளைவித்துள்ளன. அரபிக் கடலில் மே மாதத்திலும் வங்காள; குடாவில் அக்டோபர், நவம்பர் மாதங்களிலும்தான் அதிகமாகப் புயல்கள் உருவாகின்றன. அரபிக் கடலை விட வங்காளக் குடாவில்தான் அதிகமாகப் புயல்கள் உருவாகின்றன. இதுமட்டுமல்ல; அரபிக் கடல் புயல்களைவிட வங்காளகுடாப் புயல்களே அதிகப் பயங்கரமாகவும் அதிக நாசங்களை விளைவிப்பவையாகவும் உள்ளன. இவை உற்பத்தியாகும் இடத்திலிருந்து மேற்கு வடமேற்குத் திசைகளை நோக்கி நகர்ந்து, தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிஸ்ஸா, மேற்கு வங்கம், பங்களா தேஷ், பர்மா, ஸ்ரீலங்கா கடலோரப் பகுதிகளைப் பொதுவாகத் தாக்குகின்றன.

வெப்ப மண்டலம்

வெப்ப மண்டலக் கடல்களில் உருவாகும் புயலின் மையத்தில் (*Eye*) சுற்றியுள்ள பகுதிகளைவிட வெப்பநிலை அதிகமாக இருக்கும். 8லிருந்து 10 டிகிரி சென்டிகிரேடு வரை இந்த வெப்பநிலை அதிகமாக இருக்கும். காற்றின் சுழற்சி காரணமாக இவ்விதம் மையத்தில் வெப்ப நிலை கூடுகிறது. வெப்ப நிலை கூடுவதன் காரணமாகவும் காற்றின் சுழற்சி காரணமாகவும் புயல் உருவாகிச் செல்லும் பாதை நெடுகிலும் கடல் நீர் ஆவியாவதும் அதன் விளைவாக மேகம் உருவாவதும் அதிகரிக்கிறது. எப்படியெனில் புயல் மையத்தில் வெப்பம் கூடுவதன் காரணமாக அதைச் சுற்றியுள்ள பகுதி அதிகக் குளிர்ச்சி அடைகிறது. ஆகவே புயல் மையப் பகுதியில் மிகுதியாக ஆவியாகும் கடல் நீர் அதைச் சுற்றிக் குளிர்ந்து மேகமாக வசதி ஏற்படுகிறது. மையப் பகுதி வெப்பமடைவதால், அங்குள்ள காற்று லேசாகி மேல் நோக்கிச் செல்ல சுற்றியுள்ள காற்று மையத்தை நோக்கி விரைகிறது. இப்படி விரையும் காற்று பூமியின் சுழற்சி காரணமாகச் சுழன்று அங்கு வெப்ப உற்பத்திக்கு உதவுகிறது. ஆகவேதான் புயல் வீசும் பகுதிகளில் மிகுந்த வேகத்தில் கடும் காற்று வீசுவதோடு மழையும் கொட்டுகிறது. சில சமயங்களில் புயல் கடற் பரப்பிலேயே தன் நாசகாரியங்களை முடித்து நிலப்பரப்பை அடையாமல் கடலிலேயே அடங்கி விடுவதும் உண்டு. வேறு சில சமயங்களில் கடற் பரப்பிலேயே உக்கிரத்தின் உச்ச நிலையை எட்டிக் கரையைக் கடக்கும்போது பலவீனமடைந்து விடுவதும் உண்டு.

புயல் எச்சரிக்கை

கடலில் புயல் உருவாவதை முன் கூட்டியே அறிந்து பொதுமக்களை எச்சரிப்பதற்காக நம் நாட்டின் கிழக்குக் கடற்கரையில் கல்கத்தாவிலும் விசாகப் பட்டணத்திலும் புயல் எச்சரிக்கை தரும் நிலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. புயல் உருவாவதை அறிய சென்னைக் கடற்கரையிலும் 1973 ஜனவரியில் புதிதாக ராடார் சாதனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்போது பூமிக்கு மேலே சுற்றும் செயற்கைக் கோள்கள் புயல் உருவாவதைப் படமெடுத்து பூமிக்கு உடனுக்குடன் அனுப்புகின்றன. இப்படிச் செயற்கைக் கோள்கள் அனுப்பும் படங்களை பதிவு செய்யக்கூடிய சாதனங்கள் நம் நாட்டில் பம்பாயிலும் வேறு இரண்டு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. கேரளத்தில் தும்பாவில் உள்ள வான வெளி ஆராய்ச்சி நிலையமும் இத்துறையில் கவனம் செலுத்தி வருகிறது. வருங்காலத்தில் இத்துறையில் மேலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுப் புயலினால் ஏற்படும் சேதத்தைக் குறைப்பது சாத்தியமாகலாம்.



மந்தஹாஸ மகாராஜாவும் ராணி ரத்னவதியும் மங்களகிரி அரண்மனை முன் விசாலமான அந்த வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தார்கள். மாணிக்க வர்மர் அவசர அவசரமாக வந்தார். மகாராஜாவுக்குத் தரவேண்டிய மரியாதைப்படி முகமன் கூறி வணங்கினார். 'மகாராஜா அந்த வேளை கெட்ட வேளையில் முன் அறிவிப்பின்றித் திடீர் விஜயம் செய்திருக்கிறாரே, எப்படி வந்தார் எதற்காக வந்திருக்கிறார்' — இப்படிப் பல கேள்விகளை உள்ளத்துள் எழுப்பிக் குழப்பிக் கொண்டிருந்தபோது புன்னகை பூசிய முகத்துடன் கீர்த்தியும் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் முகத்தைத் தூக்கிக் கொண்டார் மந்தஹாசர்.

''உங்கள் மூத்த மகன் கீர்த்தி வர்மன் நமஸ்காரம் செய்கிறான் அப்பா'' என்று வணக்கம் செலுத்தினான் இளவரசன். அரசர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். கீர்த்தி சிரித்துக்கொண்டான்.

''அம்மா, உனக்கும் நமஸ்காரங்கள்' என்றான் கீர்த்தி. ராணி ரத்ன தேவி வெடுக்கென்று முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டாள். கீர்த்தியிடம் தனிப்பட்ட பாசங் கொண்டிருந்த ரத்னவதிக்கு இப்போது திடீரென்று என்ன வந்து விட்டது? அவளுக்குப் பிடித்தமில்லாத நம்பிக்கை இல்லாத மந்திர தந்திர ஜாலங்களுக்கு கீர்த்தி ஆட்பட்டு விட்டான் என்ற கோபம்தான் ராணிக்கு. தந்தையும் தாயும் இளவரசனுக்கு முகம் கொடுத்துப் பேசாததைக் கண்ட மாணிக்க வர்மருக்கு உடம்பெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கியது. தான் கீர்த்திக்குப் புகலிடம் கொடுத்திருப்பதாகக் குற்றம் சாட்டித் தண்டனை வழங்கத்தான் வந்திருக்கிறாரோ என்று எண்ணியபோது அவர் தலை சுற்றியது.

குந்தள வல்லியும் கிட்டத் தட்ட இதே நிலையில்தான் இருந்தாள். இளவரசரை ஏறெடுத்தும் பார்க்க விரும்பாத மன்னரையும் மகாராணியையும் கண்டபோது; அவர்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்படியான வெறுப்பையும் கோபத்தையும் கண்டபோது அவளது ரோஜா வண்ண முகம் பனியில் நனைந்த ரோஜா இதமாக வெளுத்தது. அவளது தவிப்பை, கலவரத்தைக் கண்டான் கீர்த்தி. தான் அங்கு இருப்பதை அப்பாவும் அம்மாவும் விரும்பவில்லை என்பதையும் புரிந்து கொண்டான். ஆகவே குந்தளவல்லியின் பீதியைப் போக்கி அவளுக்கு ஆறுதல் சொல்லுவதை விட முக்கியமான காரியம் அப்போதைக்கு வேறு ஏதுமில்லை என்ற முடிவோடு அவளை நோக்கி நடந்தான். வாஞ்சையோடு அவள் கரம் பற்றி அதே கூடத்தில் கொஞ்சம் தள்ளி இருந்த ஒரு சாளரத்தின் அருகே அழைத்துப் போனான்.

கீர்த்தி நகர்ந்ததும் நிலைமையைச் சமாளிக்க வேண்டி மாணிக்க வர்மர் மகாராஜாவிடம் ஏதேதோ சமாதானமாகப் பேசலானார். ஆனால் ராணியிடம் அவர் ஏதும் பேசவில்லை. ராணியின் குணம் அவருக்குத் தெரியும்.

மந்திரக் கம்பளம் 14



ஆனால் மாணிக்க வர்மரின் சமாதானங்களுக்கு மந்தஹாசர் பதில் ஏதும் கூறவில்லை. ராணி இருக்கும்போது அவர் அவசரப்பட்டு ஏதும் பேசமாட்டார். ராணிதான் பேசினாள்.

''என்ன மந்திரமோ மாயமோ? ஆனால் எனக்கு மந்திர மாயங்களில் நம்பிக்கை கிடையாது. எப்படியோ நான் அதிகாலையில் விசித்திரபுரியில் என் படுக்கையிலிருந்து எழுந்திருக்க வேண்டும். ஜமுக்காளத்தில் பறந்து வந்ததை என்னால் நம்பவே முடியவில்லை.'' மாணிக்க வர்மரும் இதே குழப்பத்தில் தானே இருந்தார்! எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது?

இதற்குள் நள சர்மா மன்னருக்கும் மகாராணிக்கும் தன் கைப்படவே தயாரித்த பழரச பானங்களைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துக் கொண்டு வந்தான். மந்தஹாசர் எந்தச் சூழ்நிலையானாலும் சாப்பாட்டு விஷயம் எதையும் ஒதுக்குவதில்லை. உற்சாகத்துடன் ருசிக்கலானார். ஆனால் ராணி ரத்னவதியோ அதைத் தொடக்கூட இல்லை.

''என்ன நடந்தது, நாங்கள் எப்படி இங்கு திடீர்ப் பிரவேசம் செய்தோம் என்பதை அறிந்துகொள்ள ஆவலோடு இருக்கிறாய், இல்லையா?'' என்று மாணிக்க வர்மரிடம் கேட்டார் மந்தஹாசர், பழ ரசத்தை உறிஞ்சிக் கொண்டே.

''ஆமாம், மகாராஜா! இம்மாதிரி முன்னறிவிப்பின்றி நீங்கள் வந்ததே கிடையாதே'' என்றார் மங்களகிரி மன்னர்.

''சாங்கோபாங்கமாகச் சொல்லுகிறேன் கேட்டுக்கொள். இன்று இரவு போஜனத்துக்கு உட்காரும் போதே கொஞ்சம் நேரமாகி விட்டது. எனக்கு நல்ல பசி வேறு. ஆவலோடு ஒரு பிடி எடுத்து வாயில் போடும் போது அறைக்கு வெளியே ஏதோ அரவம் கேட்டது. சாப்பிடும்போது எனக்கு அமைதியான சூழ்நிலை வேண்டும். அது தான் உனக்குத் தெரியுமே! உண்பதை நிமிர்த்தித் தலை நிமிர்ந்து பார்த்தேன். அரண்மனைக் காவல் தலைவன் பரபரப்புடன் உள்ளே ஓடி வந்தான். வெளியில் யாரோ ஒருவன் அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் வைத்துக் கொண்டு பரிசுப் பொருளைத் தரும்படி கேட்பதாகக் கூறினான். எனக்குப் பசி பறந்தது. கையை உதறிவிட்டு ராணியும் நானும் வரவேற்பறைக்குள் போனோம். அங்கே கையில் ஒரு மூட்டையுடனும் தோளில் ஒரு ரத்தினக் கம்பளத்துடனும் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அது உன்னுடைய அரண்மனையின் பிரதான சமையல்காரன் நளசர்மா என்று பின்னால் தெரிந்து கொண்டேன்.

''எங்களைக் கண்டதும் நள சர்மா, 'மகாராஜா! தாங்கள் அறிவித்தபடி



இதோ அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும். இப்போதுதான் அதைகொன்று இவைகளை வெட்டி எடுத்து வந்தேன்' என்று என் முன்னிலையில் மூட்டையைப் பிரித்து அவைகளைப் பரப்பினன். என் கண்களை நம்பவே முடியவில்லை.

''அக்கினி அரக்கனை எங்கு கண்டாய் எப்படிக் கொன்ருய் ? என்று கேட்டேன்.

''மங்களகிரியை அடுத்துள்ள கானகத்தில் அக்கினி அரக்கனைச் சந்தித்து அதனுடன் போராடிக் கொன்றதாகக் கூறிய அவன் நான் குறிப்பிட்டிருந்தபடி, அதற்கான பரிசுத் தொகையைக் கொடுக்கும்படியும் கேட்டான்'' என்று கூறிய மந்தஹாசர் மாணிக்க வர்மரைப் பார்த்து ''நீ அந்த என் அறிக்கையைப் பார்த்தாயில்லையா? அதை நானே தயாரித்தேன்.'' என்ருர் பெருமையோடு.

''ரொம்பவும் சிறப்பாக இருந்தது'' என்று பாராட்டினர் மாணிக்க வர்மர்.

''ம்... என்ன சொன்னேன்? ஆ! அவன் பரிசுப் பொருளைக் கேட்டான். நான் வாக்குத் தவருதவன். ஆனல் மஞ்சுளாதான் என் எண்ணத்துக்கு இணங்கி வரமாட்டாள்போலிருக்கிறது. அவள் என் இரண்டாவது மகன் இன்பவண்ணனிடம் உயிரையே வைத்திருந்தவளாயிற்றே. ம்... பாவம், அக்கினி அரக்கனைச் சந்திக்கப் போன அவன் திரும்பி வராததிலிருந்து அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத்தான் இருக்கிருள். அது இருக்கட்டும். ராணி இருக்கிருளே, இவள் ரொம்பக் கெட்டிக்காரி. எதையும் ஆழ்ந்து ஆலோசிக்கக் கூடியவள். உன்னுடைய சமையற்காரன் சொல்வது உண்மையா பொய்யா என்பதைக் கண்டறிய அவனிடம் ஒரு கேள்வி கேட்டாளே பார்க்கலாம். எனக்குக்கூட அது தோன்றவில்லை.

''அக்கினி அரக்கனைக் கொன்ற அசகாய சூரனே! நீ ஒரு அயோக்கியன், ஏமாற்றுக்காரன். மோசக்காரன்' என்ருள். உன் நள சர்மா வெலவெலத்துப் போய் விட்டான்! அவனிடமிருந்து பேச்சே கிளம்பவில்லை. ராணி கேட்டாள், 'மங்களகிரி இங்கிருந்து முன்னூறு மைல்களுக்கப்பால் இருக்கிறது. அதையும் தாண்டியுள்ள காட்டில் அக்கினி அரக்கனைக் கொன்ற நீ, அங்கிருந்து இத்தனை விரைவாக, இத்தனை பெரிய பளுவான அக்கினி அரக்கனின் கொம்பு, வால் கொண்ட மூட்டையையும் தூக்கிக் கொண்டு உன்னல் எப்படி வர முடிந்தது?'' ராணி இப்படிக் கேட்டதும்தான் எனக்கும் அது நியாயமான வாதம் என்று தோன்றியது. நானும் கேட்டேன், 'எப்படியப்பா உன்னல் இங்கு இவ்வளவு சீக்கிரத்தில் வர முடிந்தது?' என்று.

''உன் சமையல்காரன் சொன்னுன், 'ஏன் மகாராஜா முடியாது? இதோ இந்தக் கம்பளத்தின் மீது உட்கார்ந்து கொண்டு நான் எங்கு போக வேண்டுமென்று நினைக்கிறேனே அங்கு என்னை இது விநாடியில் கொண்டு போய் இறக்கி விடுமே!' என்ருன்.

'' 'சுத்த அபத்தம். வெறும் கட்டுக்கதை. ஜமுக்காளமாவது பறப்பதாவது பறக்கும் குதிரை, பாய்ந்து ஓடும் பாதரட்சை இதெல்லாம் வெறும் கற்பனைகள்' என்ருள் ராணி கோபத்துடன். எப்போதுமே அவளுக்கு இந்த மாதிரி மந்திர தந்திரங்களிலும் மாயா ஜாலங்களிலும் நம்பிக்கையே கிடையாது.

'' 'எங்கே உன் மந்திரக் கம்பளத்தை விரி. அதில் மகாராஜாவும் நானும் உட்கார்ந்து கொள்ளுகிறேம். நீயும் எங்களுடன் அதில் அமர்ந்து கொள். நாம் மூவரும் மங்களகிரியில் இதே விநாடியில் இருக்க வேண்டுமென்று நான் நினைத்துக் கொள்ளுகிறேன். உன் கம்பளம் எங்களை அங்கு கொண்டுபோய் இறக்கினல் நீ பிழைத்தாய். இல்லாவிட்டால் உன் தலை உன் கழுத்தில் இருக்காது' என்ருள். உன் சமையல்காரனும் உடனே தன் தோளிலிருந்த அந்தக் கம்பளத்தைக் கீழே விரித்தான். நாங்கள் அதில் அமர்ந்து கொண்டோம். ராணிதான் கட்டளையிட்டாள். 'நாங்கள் மங்களகிரியில் இப்போதே இருக்க வேண்டும்!' என்று.

''அவ்வளவுதான். அடுத்த விநாடியே கம்பளம் ஜிவ்வென்று தரையிலிருந்து எழும்பியது. ஆகாயத்திலே மிதந்தபடி வெகு வேகமாகப் பறக்கலாயிற்று. நடந்தது என்ன என்பதை நாங்கள் அறிந்து கொள்வதற்குள் கம்பளம் எங்களை இங்கு கொண்டு வந்து இறக்கி விட்டது. ஆகவே உன் சமையல்காரன் நள சர்மா கூறியதெல்லாம் உண்மைதான் என்பதும் உறுதியாகி விட்டது. நானும் என் வாக்குப்படி நடந்து கொள்வேன். கோழையும் குதர்க்க புத்திக்காரனுமான என் மூத்த மகனின் இடத்தை உன் சமையல்காரன் பெற்று விட்டான்'' என்று தன் நீண்ட பிரசங்கத்தை முடித்தார் மந்தஹாசர்.

வெகு நேரம் பேசியதனல் அவருக்கு மூச்சு வாங்கியது. மாணிக்க வர்மருக்கு தர்ம சங்கடமாக இருந்தது. இளவரசர் கீர்த்தி வர்மனை மந்தஹாசர் வர்ணித்தபடி கோழையாகவோ குதர்க்க புத்திக்காரராகவோ ஏற்க அவர் மனம் ஒப்ப



நான் ஒரு சிறந்த அறிவாளி என்று எண்ணுபவன் முட்டாள் மட்டுமல்ல; அவன் ஆபத்தானவனும் கூட. — டைரர்

தனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணுபவனுக்குக் கொஞ்சமாவது புத்தி உண்டு.

தனக்கு எல்லாம் தெரியும் என்று இருப்பவன்தான் சுத்த முட்டாள். — புத்தர்

வில்லை. அதே சமயத்தில் தன் சமையல்காரனை மாவீரனாக மதிக்கவும் முடியாமல் தவித்தார்.

''சாப்பிட உட்கார்ந்தபோதுதான் உன் சமையல்காரன் திடும் பிரவேசம் செய்தான் என் அரண்மனைக்குள். ஆகவே நான் இன்னும் சாப்பிடவில்லை. பசியோடு படுத்தால் எனக்குத் தூக்கம் வராது'' என்றார் மந்தஹாசர்.

''அடடா! என்னை மன்னிக்க வேண்டும். உங்களிடம் கதை கேட்டுக் கொண்டிருந்த என் மதியீனத்தை என்ன சொல்வது?'' என்று பரபரப்புடன் ஓடினார். அடுத்த நிமிடம் பல பணியாளர்கள் இங்கும் அங்கும் பரபரத்தார்கள். மந்தஹாசரின் முன்னிலையில் அறுசுவை உண்டிகள் வரிசைகட்டி வந்து நின்றன. மகாராணி எதையும் தொடவில்லை. ''அமைதியாகத் தூங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்'' என்றாள். அதன்படியே ராணி ரத்னவதிக்கு ஹம்ஸதூளிகா மஞ்சமும் அகிற் புகை வாசனையும் தயாரித்துக் கொடுக்கப்பட்டன.

யாருமே கீர்த்தி வர்மனைப் பற்றி அக்கறை காட்டவில்லை. அதற்காக இளவரசனும் வருத்தப்படவில்லை. குந்தளவல்லியுடன் நிலா மாடத்தில் இருந்த அவனுக்குப் பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன. முடிவாக அவளிடம் கீர்த்தி அதைக் கேட்டே விட்டான். ''நீ என்னை மணந்து கொள்ளுவாயா?''

''உங்கள் தகப்பனாரும் என் பெற்றோரும் சம்மதிப்பார்களானால் நான் உங்கள் மனைவியாவதற்கு ஆட்சேபனை இல்லை'' என்றாள் குந்தளவல்லி.


ஊர் அடங்கி, அரண்மனையிலும் அமைதி ஏற்பட்ட பிறகு, குந்தளவல்லியின் இமைகளையும் உறக்கம் அழுத்திச் சொக்க வைத்த பிறகுதான் அவனுக்கு விடை கொடுத்தான் கீர்த்தி. முதல் நாள் முழுவதும் அவன் தூங்கவில்லை. அவனுக்கும் அசதியாகத்தான் இருந்தது. ஆனால் முடிக்க வேண்டிய முக்கியமான காரியங்கள் சில இருந்தன. தர்பார் மண்டபத்திலே மந்தஹாசர் வந்து இறங்கிய மந்திரக் கம்பளம் அதே விரித்த நிலையில் அங்கேயே அப்படியே இருந்தது. கீர்த்தி அதன் நடுவில் போய் நின்று கொண்டான்.

''அக்கினி அரக்கன் இறந்து கிடக்கும் அந்த மலைப் பிரதேசத்துக்குப் போ'' என்று கட்டளை யிட்டான். அடுத்த சில நிமிஷங்களில் அவன் கொம்பிழந்து வாலிழந்து கிடக்கும் அக்கினி அரக்கனின் அருகில் இருந்தான். தன் இடையிலிருந்த மந்திர வாளை உருவி அதன் நான்கு பாதங்களையும் வெட்டி எடுத்துக்கொண்டான். மந்திர ஜமுக்காளத்தில் ஏறி மறுபடி மங்களகிரி அரண்மனைக்குத் திரும்பினான்.

மாணிக்க வர்மர் அப்போதுதான் மகாராஜாவுக்குப் படுக்கையறை வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். கீர்த்தி தான் உறங்கி ஓய்வு பெற ஓர் இடம் காட்டும்படி கேட்டுக் கொண்டான். மாணிக்க வர்மர் அவனுக்கும் ஒரு படுக்கை அறையைக் காட்டி விட்டுத் தூங்கப் போனார்.

அப்போது நள்ளிரவு.

கீர்த்தி தனக்கு அளிக்கப்பட்ட அறையில் மந்திரக் கம்பளம், உருவை மறைக்கும் மாயக் குல்லாய், பாதரட்சை மற்றும் தன்னுடைய மந்திரப் பொருள்களையும் அக்கினி அரக்கனின் கால் குளம்புகளையும் ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினான். அதன் பிறகு படுத்துத் தூங்கியும் போனான். (தொடரும்)



தெரியுமா?

1397. தமிழ்நாட்டில் ஓர் ஊரில் விநாயக சதுர்த்தியன்று வீட்டில் யாருமே பிள்ளையாருக்குப் பூஜை செய்வதில்லையாம். அது எந்த ஊர் என்று தெரியுமா?

1398. 'ஆடம்ஸ் ஆப்பிள்' என்ற உறுப்பு நம் உடலில் எங்குள்ளது?

1399. மாவீரன் நெப்போலியனுக்கு ஒரு பட்டப் பெயர் உண்டு. அது தெரியுமா?

1400. ரோமானியர்களின் கடல் கடவுளின் பெயர் என்ன?

1401. நார்வே நாட்டின் தலைநகரம் எது?

1402. பிரிட்ஜ் — என்று ஒரு விளையாட்டு. இதை எதைக் கொண்டு விளையாடுவார்கள்?

1403. தேக்கு, பாப்லார், ஸிடார், ரெட்வுட் இவைகளில் மிக உயரமாக வளரும் மரம் எது தெரியுமா?

1404. ரக்பி பந்தாட்டத்தில் ஒரு கட்சியில் எத்தனைபேர் ஆடுவார்கள்?

1405. எந்த விளையாட்டுக்குச் சில சமயங்களில் டாக்ஸோஃபிலி (*Toxophily*) என்று பெயர்?

1406. ராட் லேவர் (*Rod Laver*) என்ற வார்த்தை எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?

1407. முதல் முதலில் தபால் தலையை உருவாக்கியவர் யார்?

1408. பைபிளை லத்தீனிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

1409. வாட்டர்லூ போரில் தோல்வி கண்டவர் யார்?

1410. டமாஸ்கஸ் எந்த நாட்டிலுள்ளது?

1411. ஜமைக்கா, கியூபா, டிரினிடாட், மஜோர்கா — இந்தத் தீவுகளில் கரீபியன் கடலில் இல்லாதது எது?

1412. ஸ்வாலோ என்ற பறவை மாரிக் காலத்தில் எங்கு செல்லும் தெரியுமா?

1413. மீன் கூட்டங்களுக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

1414. மேரி க்யூரி, ஜேன் ஆஸ்டின், லேடி ஹாமில்டன், பிளாரன்ஸ் நைட்டிங்கேல் — இவர்களில் பிரபல நாவலாசிரியர் யார்?

1415. பார்த்தனன் (*Parthenon*) என்ற புராதனச் சின்னம் எங்குள்ளது?

1416. பார்த்தனன் இடிபாடுகள் ஒரு காலத்தில் என்னவாக இருந்தது?

1417. இஸ்ரேலியர்களை எகிப்திலிருந்து அழைத்துச் சென்றது யார்?

1418. அஸ்டெக் இனத்தவர்களின் அடையாளங்கள் உள்ள இடம் — சிலி, பெரு, கியூபா, மெக்ஸிகோ — எங்கு?

1419. இக்லூஸ் என்பது ஓர் இனத்தவரின் வாழுமிடம். அது யார்?

1420. கிரீன்லாந்து — ரஷ்யாவுக்கு, கானடாவுக்கு, அமெரிக்காவுக்கு, டென்மார்க்குக்கு — இவற்றில் யாருக்கு உரிமையானது?

1421. அடைகட்டும் பிராணி எது?

1422. ஆண் வாத்துக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

1423. டெலிவிஷன், ராடார், ஏரோப்ளேன், வயர்லெஸ் — இவைகளில் முதலில் தோன்றியது எது?


1424. ஆப்பிள் பழத்துக்கும் ஒரு விஞ்ஞானிக்கும் தொடர்புண்டு. அது யார்?

தெரியுமே!

1397. தஞ்சை ஜில்லாவிலுள்ள கணபதி அக்ரஹாரம். இங்குள்ளவர்கள் எல்லோரும் அங்குள்ள பிரசித்திபெற்ற விநாயகர் கோயிலுக்குச் சென்று கூட்டுப் பூஜை செய்கிறார்கள். கொழுக்கட்டை நைவேத்தியமும் கோயில் பிள்ளையாருக்குத்தானாம். 1398. தொண்டைக்குழியில். 1399. போனபார்ட் என்பது. 1400. நெப்டியூன். 1401. ஆஸ்லோ. 1402. சீட்டுக் கட்டைக் கொண்டு. 1403. ரெட்வுட். 1404. பதினைந்து பேர்கள். 1404. 1405. வில் விளையாட்டுக்கு (ஆர்ச்சரி). 1406. டென்னிஸ்-டன். 1407. ஸர் ரோலண்டு ஹில். 1408. வில்லியம் டைன்டேல் என்பவர். 1409. நெப்போலியன். 1410. சிரியாவில். 1411. மஜோர்கா. 1412. தென் ஆப்பிரிக்காவுக்கு. 1413. ஸ்கூல் (School). 1414. ஜேன் ஆஸ்டின். 1415. ஏதென்ஸில். 1416. அதெனா என்ற கடவுளின் கோயிலாக. 1417. மோஸஸ். 1418. மெக்ஸிகோவில். 1419. எஸ்கிமோக்கள். 1420. டென்மார்க்குக்கு. 1421. வௌவால். 1422. டிரேக் (a drake). 1423. வயர்லெஸ். 1424. நியூடன்.


சரியான வேளையில் சரியான வேலை...
அப்பா! இன்னிக்கி எங்க ஸ்கூல்லே கிரிக்கெட் மாட்ச் நடந்தது. என்னே சீக்கிரம் 'அவுட்' ஆக்கிப்புட்டாங்க!
அதெப்படி ராமு ?... என்னாச்சு ?...
மணி வீசிய 'ஷார்ட் பாலே' நான் 'கட்' செய்யப் போனேன். ஆனா பந்து 'பாட்'டின் விளிம்பிலே பட்டு எழும்பி, நேரே விக்கெட் கீப்பரின் கையிலே சிக்கிடுத்து.
அப்படியா? ஆனால், 'ஷார்ட் பாலே' அடிக்க பலவித 'ஸ்ட்ரோக்'குகள் இருக்கே! உதாரணமாக, 'ஹுக்' அடிக்கலாம். நீ சிறிது வலது பக்கம் நகர்ந்து, பந்து உன்னுடைய இடது பக்கம் உயரே வரும்படி நின்றுகொள். பந்து வந்ததும் 'பாட்'டை மேற்புறம் சுழற்றி அடி–
முழு பலத்துடன் அடித்தால், நீ முழுவதும் திரும்பி, விக்கெட்கீப்பருக்கு நேரிலே வந்துவிடுவாய்!
சரி, மணி எட்டரை ஆகிவிட்டது. போய் படுத்துக்கொள்... பல் துலக்கிவிட்டாயல்லவா?
ஓ! சாப்பிட்டவுடனே வாயைக் கொப்பளித்து விட்டேனே, அப்பா!
சரி, அப்பா.
FOR THE GUMS
போர்ஹென்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

49F-203R-TAM



'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


வீரச் சிறுவர் ராகுவும் வாகுவும்
சூனியக் கிழவியை சந்தித்த படலம்
கும்மிருட்டான காடு. குடிசை ஒன்றைக் காண்கிறார்கள்
ஓர் ஆள்கூட அங்கில்லே ஏராளமான முயல்கள். தேரைகளின் கூட்டம்,
அடுத்த கணமே அடடா, விபரீதம்! பிராணிகள் பேசத் துவங்கின.
உதவுங்கள், நாங்களும் உங்களைப் போலவே மனிதர்கள்
திடீரென ஓர் இடி! துடைப்பத்திலேறித் துள்ளிவந்தாள் ஒரு சூனியக் கிழவி.
"பிடிபட்டீர்களா! பிடி சாபம்! உங்களைத் தேரைகளாக்குவேன்" சீறினாள் கிழவி
யோசனையோடு ராகுவும் வாசுவும் வீசினார்கள் பளிச்செனப் பாப்பின்ஸ் பேக்கெட்டுகளை.
சொக்கி மகிழ்ந்தாள் சூனியக் கிழவி. சிக்கிய சிறுவரும் விடுதலை பெற்றனர்!